வந்த ராசியாதிபதி திசை புத்தி சித்திரங்களிலும் வித்தையுதன முமூண்டாம் புதனுடைய திசை புத்தி சித்திரங்களிலும் இப்பலன் சொல்லுக முன்பெருக்கி 12 ல் கழித்தசேடத்தைபுதனுக்கு இரண்டாமிடத்தில் சோதிக்கும் முன்னுள்ள பரலையும் பெருக்கி 27 ல் கழித்த சேடம் அசுபதி முதலெண்ணி யறியவும் சாதகன் பிறந்த காலத்தில் சனி நின்ற நாள் துடங்கி யெண்ணி வந்த நாளில் மாதுலன் பிருணமாகியசினேகிதாள் பந்துக்கள் தனம் நாசம் சூனியராசியில் சனி செல்லுனுள் புத்திரனுசம் அந்த சூனியவிருசி உபயஸ்தானமாகில் மிகவும் உபத்திரவமில்லை புதனின்ற ருசிக்கு 4 ம் ருசி 6-ம் ருசி சூனியமாகில் அதில் சனி வருநாள் பிறவாதி கருமம் நாசம் 4-ம் இடம்சூனியமாகில் அதில் சனிவருநாள் மாதுருனுசம் அஞ்சாமிடம் சூனியமாகி அதில் சனிவருநாள் பந்துனுசம் தேசாந்திரம் போகை ஆறுமிடம் சூனியமாகிய அதில் சனிவருநாள் மாதுருனுசம் ஏழாமிடம் சூனியமாகில் அதில் சனிவருநாள் களத்திரனுசம் 12-ம் மிடம் சுயசனமரணம் புதன் பலயீனமாய் அஸ்தமித்தால் வித்தையீனம் நீசமாகிலற்ப வித்தை ஆட்சி உச்சம் நட்பாகில் வித்துவான் சஸ்டாட்டம் வியத்திருக்கில் கஷ்டபலன் அதில் சுபன்னோக்கினுலும் கூடினுலும் அனுகூலம் பிலயீனமாயிருக்கிற சந்திரன் சூரியன் செவ்வாய் சனி கூடினுலும் அந்த புதன் பாபியானுலும் துஷ்ட பிரவிர்த்தியம் துஷ்டவசனமும் நீசப் பிறவர்த்தியுமாக யிப்படி சிறுவித்தைபடிக்கவும் அதில்விசேஷமான புத்திகொண்டு காலதேசவர்த்தமானங் கொண்டு அவனவன் குணசரித்திர மரிந்து புத்திமானுக யிருக்கிறவனுக்கு ஜாதகம் குரித்துச்சொல்லவும் சுத்தபிண்டதுகையை புதனுக்கு இரண்டில்யிருந்த பரலால் பெருக்கிக்கொள்ளவும்.

## குரு அஷ்டவர்க்கப் பலன்.

குரு நின்ற ராசிக்கு 5 ம்ராசி பரல் எத்தனையோ அத்தனை புத்திரருண்டு இதையும் முன்போலவே ஆண் பெண் சொல்லவும்

லக்கினத்துக்கு 5-ம் ராசியினாலும் சொல்லலாம் குருபெலவானாக விருக்கவேண்டும் லக்கினத்திலும் 5-ம் இடத்திலும் பாபகிரகமிருந்தால் புத்திர ஆனி லக்கினத்து 5-ல் மூன்று பரலிருந்தால் அற்பபுத்திர யோகம் 5ருசி சமுதாய பரலே சோத்திய பரலாலே பெருக்கி 27-ல் கழித்தமிச்சம் முன்போலே அசுவினி அவிட்டமுதலாகமெண்ணிக்கண்ட நக்ஷத்திரத்தில் குருவருங்காலம் புத்திருண்டு.

கேந்திரலாப திரிகோணத்தில் சோடசேத்திர உச்ச ஆட்சியிலிருக்க சுபன்கூட அதிக பரலிருக்க வெகு புத்திருள் தனாட்டியன் சத்துருவுடைய க்ஷேத்திரத்தில் சஷ்டாட்டம் வியத்தில் குருவிருக்க சுப பாவிகூட அதிக பரலிருக்க திரவியநஷ்டம் சுதட்க்ஷயம்.

8-பரலுடன் குருவிருக்க வெகுராச்சியத்துக்கு நாயகன்புத்திர பவுத்திர தனாட்டியன் ருச ருச்சியம் பூசித்தனும் றந்திரேசன் லாபேசன் தனு குரு சசேதனேச பாக்கியேச புரோவித்தது வாவிருஷ்டிம் பிறமாத்திஷ்டியா.

7-பரலுடனிருக்க ருசா நூறு யோசினைக்கு வல்லபன் பத்துலட்சம் தனமுடையன் அழகுடையன் வாலிபத்தில் புத்திரவான் குருவுடன் பாவிகூட துற ண புத்திரனுண்டாம் சுபனுடன் கூடஅல்லது கேந்திரத்திலிருக்க பதினாறு வயசில் சுதலாபம் அஞ்சுபுத்திர புத்திரி தீர்க்காயுத சம்பதன் கேந்திரதிரிகோணத்தில் குருவிருக்க பத்து பிள்ளைகள் நிச்சயம் பாவி பார்க்கில் மிருத்திபோக ஏழு பிள்ளைகள் சிருயுசு.

5-பரலுடன் குருவிருக்க ஏககிரும புருதிபன் அழகுடையன் தனசம்பன்னன் 20 ம் வயதில் புத்திரலாபம் சஷ்டாட்டவியத்தில் குருவிருக்க சத்துரு பிருதுரு பிலமாம் பிருத்துவந்தா சிவனம் சுவயம் சிவேதனம் பருவத்து சேந்திரதிரிகோணத்தில் குருவிருக்க சுபனுடனேகூடபிளக்க 7 புத்திரன் 2-புத்திரன்சத்துவாரிசிருயுசுபாவி கூட பார்க்க கிரிபாக மிருத்தி யடையும் வணிசங்கை பலேசிவே ஏககி

ருமபுருதிபன் ஏழுபுத்திரலாபம் மூன்று மிருத்தியடையும் சுபன் கூடில் சிறுபுசு சுதபந்துலாபம் தனபாக்கியமுடையன் பூபாலம் புத் திரலாபம் சுகமடைவன் 3 பரனுடன் குருவிருக்க 7 புத்திரலாபம் வெகு புத்திரன் 2 பெண் சேஷ மிருத்தியடையும் தனபாக்கியம் சுதப ந்து பலபக்கந்தும் வாக்குபதி வேகபுத்திரனுகிலும் யேக புத்திரியாகி லும் லாபம் மத்தியில் சௌக்கியம் கொஞ்சம் கொஞ்சம் ச்ஷ்டாட்ட வியத்தில் யேக பரனுடன் குருவிருக்க பிதாதேடின தனம் ஜெயம் சுப னுடன் கூடில் அல்பஜீவனம் பாவன தரித்திர சம்பலன் குருஸ்தனப ஞ்சமேருசன் சுதஸ்தானத்தில் பரல் சங்கை அவ்வளவு புத்திருண் டாம் ஸ்தானுதி காரகம் வரைக்கும் கிரகசங்கை புத்திரலாபம் காரகமு தல் ஸ்தான நாதன் வரைக்கும் கிரகசங்கை புத்திருள் சிறுயிசு புத்திர ஸ்தான மவ்வீடாகில் பஞ்சமமுதல் 9-பரல் வறைக்கும் யிருக்கில் புத்திரலாபம் பாபிகூடில் சுதட்சயம் சொல்ப பரல் வீடாகில் காலாந் திரத்தில் புத்திரவான் தாரத்துவயம் பின்னுல் புறதாரத்துக்கு புத்தி ரலாபம் புத்திரஸ்தானம் சனிவீடாகில் குரு சவுமியாள் பார்க்க சொல்ப புத்திரனுடையன் பாவிகூட பார்க்கசர்வ புத்திரரும் மிருதியடையும் புத்திரியும் மிருதியடையும் புத்திரஸதானம்செவ்வாய் வீடாக பரலிருக்க 1-2-3 புத்திரலாபம் பாவிபார்க்க சுதட் சயம் 1 2 3பரலிருக்க சுபன்கூடில் ஏகபுத்திரன் பரல் சூனியமாகில் பாவி பார்க்கில் புத்திராந்த சமுசயமில்லை புத்திரஸதானத்தில் 5-பர லிருக்க சுபன் பார்க்க புத்திர புத்திரி சம்பிரூபத்தி சமுசயமில்லை புத் திரஸ்தானம் புதன்வீடாக சனி குளிகனிருக்க பார்க்க பிள்ளை பிறந்து பிறந்துபோம் அபுத்திர சாதகன் நிட்சயம புத்திரஷ்தானம் குருவீ டாக அதிக பரலிருக்க பத்து பிள்ளைகள் லாபம் பாவி பார்க்கிற பாதி ஆனிகுருசமாமந்த பரமேச்சரவி ருது சமனிதே குரு சாபம் தெய்வ சாபம் பிராமண சாபம் பிதிர் சாபம் சர்ப்ப சாபம் உண்டாம் சாந்தி செய்யில் புத்திரலாபம் லக்கின கேந்திரத்தில் குருவிருக்க புத்திர தீர் க்காயுசு தனதானிய பலாதீனி மிருஷ்டானன் போசனம் பாவிபார்க்க சுட்ககாளனம் காலபோசனம்.

தனத்தில் குருவிருக்க வாச்சாலகன் வித்தையன் தனலாபன் 3-ல் குருவிருக்க திடசித்தன் தைரியன் பி ரு து ரு புத்திரவிர்

த்திவான் 4-ல் குருவிருக்க சாரதி வாகனதிபன் புத்திர மித்திரர் களத்திரன் பந்து கோஷ்டி சங்குலம் தீர்க்காயுசு மாதுருவர்க்கத்தில் வெகு சௌக்கியம் சிரூயுக அஞ்சில் குருவிருக்க ரூசபிரிதிவல்லவன் பறபத்தியத்தில் தனலாபம் அல்பபுத்திரன் ஆறில் குருவிருக்க ரத்துரு ரோகமுடையன் சகோதரனல் கலகம் குடே தம் க்ஷயவிர்த்தி சீவனம் எழில் குருவிருக்க குணரூபமுடையவன் பதிபத்தி சதாசாரன் குணபுத்திர சம்பத்து 8-ல் குரு விருக்க கொஞ்சம் கொஞ்சம் தேகாரோக்கியம் நிட்சேபம் தனலாபம் மத்திமாயுரு 9-குருவிருக்க புத்திரவான் தனவான் தாரமிசன் நிறத சிமான் சதா பிராமண சங்குலம் புத்திரதேட்டில் தன பாக்கியம் அதிதி சனபோசனம் பிதிர் வர்க்கத்தில் தீர்க்காயுசு பிதிர் பாக்கியம் தனம் அடைவான் 10 ல் குருவிருக்க சதாசாறமுடையவன் ஏகாதிக்கிரம் சம்பன்னன் வேதசாஷ்திர விசாரதன் தனலாபத்தில் குருவிருந்தால் விரையம் சொல்ப புத்திரன் சொஞ்சம் வித்வம் டம்பாலங்காரப்பூச்சியன் யிது துவாதிச ராசியாகி அதிக பரலிருக்கில் சுகம் சொல்பபரல் மத்தியோகம் சூனியமாகில் அதமம்.

வியாழம் நின்ற ரா்சிக்கு 5-ல் பரல் கொடுத்தாரென்று அரிந்து சத்துரு நீசகிரகம் பரல் தள்ளி நின்றது சங்கை அதில் புருஷகிரகம் ஸ்ரீகிரகம் நபுஞ்சுகிரகம் பரலறிந்து ஆண் பெண் அலி நிச்சயிக்கவும் கிரகங்கள் பிலக்கில் புத்திரபிலம் பிலயீனமாகில் சிதைவு வியாழனுக்கு 5-ம் மிடந்துடங்கி 3-3-ரூசியிலும் பரல் சமனுகில் அறபசந்ததி 5-9ல் சம்பரலாகில் அற்பசந்ததி புத்தி ரஸ்தானுதி புடத்தைவைத்துபரலெண்ணிக்கண்ட தெத்தனையோ அத்தனை பிரசையென்று சொல்லவும் பரல் கொடுத்த கிரகங்கள் வர்ணமும் குணங்களும் புத்திரர்களுக்குச் சொல்லவும் அந்தகிரகங்கள் கன்னிமீன காலில் நிற்கில் இரண்டு வருஷம் பிரசை மினனகாலுக்குமேல் நின்ற கிரகத்து பாலுக்கு றெட்டிச்சிருக்கும் சுபஉச்சரூகியில் நிற்கில் மும்மடங்கு சுபட்சேத்திர பாவியத்துக்குறட்டிச்சபிரசைசொல்லவும்5 ம்மிடத்தில்பரல்கொடுத்த யிராசிகிரகங்கள் பிலவான்களாகில்அவர்களுடைய அங்கிஷத்திரிகோணத்தின் நட்சத்திரம் புத்திரருடைய நட்சத்திரமாம் அந்த சந்திரன் ஆதி திரேக்காணமாகில் அவன் நின்றநாள் இரண்டாந் திரேக்காணத்

துக்கு 5 ம் ராசியில் மூன்றும் திரேக்காணத்துக்கு 9 ம் ராசியில் வருகிறநாளிலும் அறிக வியாழம் அஷ்டவர்க்கத்தில் எந்தராசியில் பரல் அதிகமாக யிருக்கிறதோ அந்த ராசியில் வியாழம்வரில் சந்ததியுண்டாம்புத்திரகாரகனுடனே யாவது ஸ்தானாதிபதியுடனேயாவது சுக்கிரக திஷடியில்லாமல் கேது சேர்ந்திருந்தால் பிள்ளைகள் மரித்து யிறக்கும் அல்லது பிறந்து யிறக்கும் இதற்கு பௌக்கிய சாந்திசெய்தால் அனுகூலமுண்டாம் இதற்கனுசரணையாக சந்தான தீபிகையைப் பார்க்கலாம்.

## சுக்கிரன் அஷ்டவர்க்க பலன்.

சுக்கிரன் நின்ற ராசிக்கு 7-ம் ராசியில் எத்தனை பரலிருக்கிறதோ அத்தனை களத்திரமாம் அது சூரியன் கொடுத்த பரலாயின் பிதுர்வர்க்கத்திலும் சந்திரன் கொடுத்த பரலாயின் தாயவர்க்கத்திலும் சனி செவ்வாய் கொடுத்தபரலாயின் அந்கியவர்க்கத்திலு முண்டாம் லக்கினத்துக்கேழில் சுக்கிரனிருந்தால் களத்திறப்பலன் சனியிருந்தால் ரோக களத்திரம் புதனிருந்தால் களத்திரயீனம் செவ்வாய் சூரியனிருந்தால் காந்தருவ களத்திரமாம்.

தானே சுதே வாகனத்தில் பாக்கியலாபத் திரிகோணத் திருக்க சுவாங்கிஷத்தில் சோடசேத்திரத்தில் சுக்கிரனிருக்க வாலிபத்தில் விவாகசம்பவம் அதிக பரலிருக்கில் போகி மத்தியவிந்துசொல்ப சோகவான் பரல் சூனியமாகில் தரித்திரன் விவாகம் வெகுகாலத்துக்குப் பின்னுண்டாம் விளம்பன விந்ருதிருக்கில் சுபனுடனே கூடபோக போக்கியயேகதாரவான்.

8 பரலுடன் சுக்கிரனிருக்க பாக்கியலாபம் வாகனம் வாலிபத்தில் விவாக சம்பவம் கேந்திரதிரிகோண சோடசேத்திரத்திருக்க சோடசேத்திர உச்சத்தில் சபாங்கிஷத்தில் சக்கிரனிருக்க நானா வாகனம் சய்யுதன் ராசஸ்ரீ வெகுபோகவான்.

7-பரலுடன் சுக்கிரனிருகக ஆந்தோழி யாதி வாகனம் பிலவான்

யோகதாரன் வெகுஸ்ரீகளுடனே போகவான் பாபியுடனேசுக்கிரன்கூட அவ்வளவு சங்கை தாரமுடையன் நீசத்தில் குருகேதுவுடனேகூட யீன ஸ்திரீயுடன் போகமான் செவ்வாய் கூடில்புஷ்பணி சங்கமம் குரு சண்டாளஸ்ரீ சூரியன்நாலுவர்ண சாதியில் சனிக்கு சூத்திரஸ்திரீ 7-ல் கேதுயிருக்கில்- சுபசிய உத்தமவானுய்யாவிர்த்தி விந்திருக்கில் விர்த்தி மத்திமம் அல்ப பரல் சொல்ப போகி சூனியமாகில் அபகீர்த்தியன்.

6-பரலுடன் சுக்கிரனிருக்க வாகனம் தனதானியவான் 10 தசவச்சர யோர்மத்தியே விவாகம் பிறையாசமாகவுண்டாம் சஷ்டாட்டம் வியே சுக்கிறே சுப்பாபிச மனிதனுக ஆறுமுதல் பாவிருகக வாகனம் பூஷணமுண்டாம் செவ்வாய் புதனுகில் ஸத்தூலகுணரூப குருஸ்சுான சனியாகில் கிஷ்டன் வர்ணம் குருதாம்பிரவர்ணம் சூரியனுகில் சிவப்புவர்ணம் சுவெதரத்த தீறக்கேசிரவி சுக்கிர குச கிரமாதியாம அற்கஸ்தனியாம் கூசன சல்லாபமானம்சதாகாமனியம் செவ்வாய் கபித்தே குருஸ்ததா நானிக்கெற்பபலசஸ் சந்திரேகஸ ஸவன்னியாம் சனிஸத்தா குரு கேதுவாவாகில் தனி சுக்கிரனிருக்கில் அந்தப்படி யேழிலிருந்த கிரகத்தினுல் யிந்த வர்ண விவரங்கள்.

5-பரலுடன் சுக்கிரனிருக்க வாகனம் கொஞ்சம் கொஞ்சம்ஆறசித மிறுத நஷடம் யாவசிவவனாக்கும் வாகனம். குரு செவ்வாயுடன் சுக்கிரன் கூட ரூபஸதிரியுடன் போகவான்.

4-பரலுடன் சுக்கிரனிருக்க அசுவவாமன சம்பவம் மததியமத்தியில் யீனம் பதினறு வருஷத்தில் விவாகம் யெந்தபாவிகிரகத்துடன் கூடில் அவ்வளவு களத்திர சங்கையன் பார்க்கில் அவ்விளவு போகவான் சுடன்கூடில் கொஞ்ச கொஞ்ச தாறவித்தாதிபன் அந்த ஷ்தானத்தில் நாலிலிருக்க சுக்கரற்கு 7-ல் சௌரிய னிருக்க ஏகதாரவிரதன்.

1-2-3-பரலுடன் சக்கிரனிருக்க 20 வருஷத்தில்விவாகம் சத்திய ரூபம் குணம் சொல்பம் சதாகால இமுசை படுவான் சுப பன்கூடிய சவுமீஸ்ரீ பாவி குரு கூடில் தாறசச் சுபாவியனையுதேசவு

மியே சுக்கிரே குரூர சௌமியம் கொஞ்சம் கொஞ்சம் தாரஸ்ரனத்திருக்க சூனியமாகில் காலாந்திரத்தில் விவாகம் அகாலத்தில் தாரபோகவான் கொஞ்சபோகமுடையன் தாறஸ்தானம் தாறநாதன் சுக்கினத்தில் பால் சூனியமாகில் யாவசீவம் தாரயீனம் தரித்திரபலமுடையன் கேந்திர திரிகோணலாபத்திருக்க சூனியராசியிலிருக்க அன்னியதார சம்போகம் அன்னிய தேச பிறவேசம் சஷ்டாட்டம் வியத்தில் சுக்கிரனிருக்க தாரவித்தம் சூனியம் தாசிகளில் விதவை சங்கமன் யாவ்சிவவரைக்கும் போகவான் இதுசுக்கிர அஷ்டவர்க்கம்.

சோதிக்கு முன்னெந்த ராசியில் பரலேறி யிருந்துதோ அந்ததிக்கிலே விவாகமும் பூமியுந் திரவியமும்முண்டாம் சுக்கிரனின்ற ராசிக்கு 7 ம் இராசியில் அந்த திரிகோணத்தில் களத்திரம் வரும் லக்கினத்துக்கும் சந்திரனுக்கும் 9 ம் ராசியிலாவது சந்திரனின்ற ராசிக்கு 12 - ம் ராசியிலாவது அவ்விராசித் திரிகோணத்திலாவது 7 - ம் இடத்தையுடையவன் எந்த ராசியிலிருந்தான் அந்த ராசி திரிகோணத்திலாவது அவனுடைய உச்ச நீச திரிகோணத்திலாவது களத்திர நட்சத்திரம் வரும் அல்லாத ராசியில களத்திர நட்சத்திரம் வந்தால் சந்ததியுண்டாகாது 9-ம் இடத்தை யுடையவனும் 7-ம் இடத்தை யுடையவனும் நின்ற ராசியில் சுபகிரகங்கள் பரலெத்தனை வந்து தோ அத்தனை ஸ்திரியுண்டாம்.

சோத்திய சேடத்தை சுக்கிரனின்ற ராசிக்கும் 7 - ம் ராசி பரல் கொண்டு பெருக்கி 27-ல் கழித்து நின்ற ஞாழில் சனிவருங்காலம் களத்திர நிறியாணம்.

## சனி அஷ்டவர்க்கப் பலன்.

லக்கினத்துக்கு 8-ம் ராசியிலிருந்த சமுதாயபரலையும் சனிநின்ற ராசியின் சோத்திய பரலையும் பெருக்கி கண்ட தொகைவருஷத்தில் சாதகனுக்கு தத்து மேற்படி தொகையை 27- ல் கழித்து மிச்சத்தை அசுவினி அவிட்டமுதலாக முன்போல எண்ணிக்கண்ட நக்ஷத்திரத்தில் சனிவருங்காலம் தேகபீடை சனிநின்ற ராசிச் சோத்திய பரலையும் லக்கினத்தின் சமுதாய பரலையும் பெருக்கிக்கண்ட தொகையை

27-ல் கழித்த மிச்சத்தில் முன்போல்கண்ட நக்ஷத்திரத்தில் சனிவருங் காலம் தேகபீடை லக்கினமுதல் சனியிருந்த ராசிவரையுமுள்ளசோத் திய பரல்களையும் குளிகனிருக்கிற ராசிமுதல் லக்கினம் வரையிலு முள்ள ராசிகளின் சோத்திய பரல்களையும் பெருக்கி 27-ல் கழித்து சேடத்தை முன்போல எண்ணி கண்ட நக்ஷத்திரத்தில் சனிவருங்கா லம் நிறியாணம்.

சோத்திய பரலென்று சொல்லாதவைகள் சமுதாயபரலாம்.

3-6-11 திரிசஷ்டாயத்தே மந்தே உச்ச ஆட்சியிலிருக்க தீர்க்கா யுசு பிலபுஷ்டியன் யாவசிவ மணிரோகவான்.

8 பரலுடன் சனியிருக்க சொக்ஷேத்திரத்தில் சுபனுடன் கூட சதாயுசு பிலபுஷ்டியன் யாவசிவம் சுகமடைவான் சூரியன் செவ்வாயு டன் சனிகூடில் கேந்திரலாப திரிகோணத்திருக்க பித்தகுணம் க்ஷய வியாதி மத்தி மத்தியில் கொஞ்சமுண்டாம்.

7-பரலுடன் சனியிருக்க ஆயுஸ்தானத்தில் அதிக பரலிருக்க தீர் க்காயுசு பிலபுஷ்டியன் நலத்தில் சிறுயுசு எந்த கிரகமுறைந்திருக்க அந்த கிரக கண்டமுண்டாம் அந்த திசை புத்தியில் சக்கிறபளதயில பீடையன் அந்த கிரக கோச்சாரகாலத்தில் வந்த காலத்தில் கண்டம் நிச்சியம் லக்கினேசன் ஆறெட்டிலிருக்க பாவிகூட அல்ப பரலிருக்க துற்பிலன் ரோகபீடை யாவசிவவரைக்கும் நிட்சயம் நந்திரேசன் சுத னுதனுக கூடபார்க்க சொல்ப பரலாகில் ரோகன் விர்த்தி பரலாகில் மத்திமம்.

6-பரலுடன் சனியிருக்க ஆயுசு னுதன் சுபனுக விர்த்திவிந்துட ன் நந்திரமிருக்க 50-பஞ்சாசித்தி சிராயுசு லக்கினுதிபன் சுபனுக கேந்திறத்திருக்க சுகசௌக்கியம் நிரோகவான் பாவிகூட அல்பவிந் திருக்க கொஞ்சம் ரோகம் கொஞ்ச சுகம் சுவசலன் நாவில்கடகம் வியாதி குணப்சயம் பாண்டு மேகம் குஷ்டம் விஷரோகம்விரணமுடை யவன் மிறுத்தியுயோகம் வியாதினும கிரமாச்சா.

5-பரலுடன் சனியிருக்க சஷ்டாட்டம் வியருசியிலிருக்க தீர்க்கா யுசு வடசார தித்தி கேந்திர திரிகோணலாபத்திருக்க சுபபாபிச மனி தனுக அசௌக்கியம் காலில் புண்புரை யுண்டாம்.

4-பரனுடன் சனியிருக்க றந்திரனுதனி அதிக பரலிருக்க பலபுஷ்டி தீர்க்காயுசு புறதிவட் சிறுயுசு லக்கினனுதாயு சனி ரந்திரே வேதசங்கை தீற்போஷ் கஸ்தா அத்வாகாரக்கே நாதே 4 பரனுடனிருக்க சூத்திரனைவல்ல பயம் சிறக்காலே சீவனம் இரண்டுபரனுடன் மித்திரன்கூட மகா சௌக்கிய முடையவன் 2 விந்துயிருக்க சத்துருவுடன்கூட கொஞ்சம் சௌக்கியம் கொஞ்சம் சுகம் ஈனபரனுடன். சனியிருக்க 8-றந்திரத்துக்கு றந்திரத்தில் அந்த பரலிருக்க சஷ்டி புஞ்சாசத்துரு சுபன்கூடில் சுபங்கள் றந்திரனுதன் சத்துருவுடன்கூடி லக்கினுதன் துற்பிலனுக 16-ல் சனி ருசியில் சூனியமாகில் 2 பரனுடன் சனியிருக்க மித்துருசத்துருபார்க்க இருக்க மத்திமயாயுரு யோகம் யேகவிந்துடன் சனியிருக்கில் 32-ல் மரணமாயிசு றந்திறத்தில் றந்திரனுதனுடன் அதிக பரலிருக்கில் வெகுகண்டமுடையவன் 36-ல் ருஷபறமாயிசு லக்கின கேந்திரத்தில் சனியிருக்க ரோகப் பீடையன் துற்பிலன் பந்துமித்திராள் விரோதன் கலகம் கடுமூர்க்கவான் தனஸ்தானத்தில் சனியிருக்க அல்பவித்தை தனட்சயம் அக்கினி சாஸ்திர ஸ்திரியோ யினியாவசீவம் தனவிரையும் விக்கிரமத்தில் சனியிருக்க அதயிரியம் பிருதுருனுசம் சஞ்சல பலமுடையவன் சாற்வகாலமும் வஞ்சகன் மாதுருஸ்தானம் சனியாயிருக்க சுக பூஷணயீனன் மாதுரு ஆனிவாகனன் யாவசிவ தரித்திரன் 5-ல் சனியிருக்க தெய்வ சாபத்தினல் சுதட்சயம் பிதுர்புத்துரு அதோ ஆனிருச பீதியன் குயுத்தியன் 6-ல் சனியிருக்க பங்கமறுனட்சயப் பரத்தினல் சுதட்சயம் பிதிர்புத்துரு சுஷகற்ரோகன் திடகாத்திரன் பிலபுஷ்டிவர்த்தனம்.

7-ல் சனியிருக்க வெகுதாரமுடையன் அதிக காமியன் துற்பன் 8-ல் சனியிருக்க மாதா பிதிர் பீடையன் சதாபோகன் ரோகன்மத்தியமாயுரு 9 ல் சனியிருக்க பிதிர்பாக்கியம் தனட்சயம் வதததா பறதத்தவா தர்மவிக்கினன் 9 ல் 10-ல் சனியிருக்க யேகாதிகிருது கிற்ணயம் சன்னியாவி யாத்திரை சித்தி அல்பசுறமாதசுகிலாபத்தில் சனியிருக்க சற்வலாப முடையவன் தாருபுத்திர தீர்க்காயுசு பாவிகூடில் கொஞ்சம் கொஞ்சம் வியத்தில் சனியிருக்க தனதானிய சம்பதன் அகாலபோசனமுடையவன் அபாத்திறத்தில் தனம் விறையம் சூரியனுடன் சனிகூடியிருந்தால் வாலிபத்தில் ரோகம் பிதிர்சயம் உஷ்ணதேகம் கிறிஷிகாயாபவாதி மிதபோசன் றந்திரயுத்தேயதா மந்தே சசி

பால பசுநாசனம் மாதுருயீனம் மலினவஸ்திரம் சூடகாளன வெருபோசனம் செவ்வாயுடன்கூடில் விரணமுகம் சுரம் மெட்கம் சாஸ்திரகாதன்சட்சேத்துரு பிருதுரு மத்திமம் புதனுடன்கூடில் சலராகா திரிஷ்டனம் சதாரோகியன் துற்பிலவான் குரு சுக்கிரனுடனே கூடில்சேவ்டபிராதுரு சுதட்சயம் யாவசிவம் வரைக்கும் சூத்திராணம் மிலேச பாகையன் சுக்கிரனுடன் கூடில் விதவை புஷ்பனிறதன்.

குணசமுக பிண்டத்தைவைத்து சோதிக்குமுன் சனிநின்றராசி பரலைக்கொண்டு பெருக்கி 27 ல் கழித்து நின்ற சேடம் அசுபதி முதலாக யெண்ணி கண்ட நாளில் சனிவருங்காலம் வியாழம் நின்றராசி பரலைக்கொண்டு பெருக்கி 27ல் கழித்து நின்றசேடம் அசுபதிமுதலாக யெண்ணி கண்ட நாளில் வியாழம் வருங்காலம் ஆதித்த னின்றராசி பரல்கொண்டு பெருக்கி 27 - ல் கழித்து நின்றசேடம் நாளில் ஆதித்தன் வருநாள் சனி நின்ற ராசிக்கு அஷ்டமத்து பரலைக்கொண்டு பெருக்கி 27 ல் கழித்து நின்ற சேடனுளில் சனிவருங்காலம் சந்திரனின்ற ராசி பரலைக்கொண்டு பெருக்கி 27·ல் கழித்து நின்றநாளில் சந்திரன் வருனாள்சாதக நிறியாணம்.

இலக்கணமாவது லக்கினங்கிஷக் காலாவது காலாமிராசி அக்கிஷ காலாவது சாதக நிறியாணம் சூனிய ராசியில் சனிவருங்காலம் கஷ்ட பலன் லக்கினமுதல் சனிநின்ற ராசிவரைக்கும் கூடினபரலையும் லக்கினமுதல் அஷ்டமராசிவரை உண்டாகியபரலையும் சனிமுதல் லக்கினம் வரைக்கும் உள்ள பரலை துகைகூட்டி 3-ல் பெருக்கி 27-ல் கழித்துவந்தயீவில் சாதகனுக்கு தத்து முதலான கண்டம் வருங்காலம் லக்கின முதல் சனிநின்ற ராசிவரைக்கும் விழுந்த பரலையும் துகைகூட்டி கண்டதொகை வருஷத்தில் காலில்கட்டுரோகம் தத்துண்டாம்.

லக்கினத்துக்கு மூன்றாமிடத்துக்குடையவன் அமிசையில் எந்த சனிவருங்காலம் மாரகம் சொல்லவும்.

## சர்வாஷ்டவர்க்கம்.

சர்வாஷ்ட வர்க்கத்தில் 30 பரலுடன் பரலுக்குமேல் லக்கினத்தி லிருந்தால் ஆரோக்கியமும் பாக்கியமும் உண்டாம் இரண்டாமிடத்தி லிருந்தால் நல்லவாக்கும் வித்தையும் தனமும் உண்டாம் மூன்றாமிடத்தி லிருந்தால் சகோதிர பாக்கியமும் ச்ரீரபிலமும் போசனமும் உண்டாம் நாலாமிடத்தி லிருந்தால்கிரகவாழ்வும் மாதாவுக்கு சவுக்கியமும் உண்டாம் அஞ்சாமிடத்தி லிருந்தால் நல்லபுத்திரசம்பத்து முண்டாம் ஆறாமிடத்தி லிருந்தால் கலகமும் பீடையும் சத்துருவுமுண்டாம் ஏழாமிடத்தி லிருந்தால் களத்திரமும் குணமும் அலங்காரமும் சந்தோஷமும் உண்டாம் எட்டாமிடத்தி லிருந்தால் அனேகவியாதியும் ஆபத்துகளு முண்டாம்ஒன்பதாமிடத்திலிருந்தால் சருபத்தியும்தவமும்பெரியோர்களிடத்தில்கேள்வியும்தனமும்உண்டாம்பத்தாமிடத்திலிருந்தால் தொடுத்தகாரியம் முடிக்கவல்லமையும் தர்ம்மபணிவிடையும் ஞானமும் அறிவும் உண்டாம் பதினோராமிடத்தி லிருந்தால் கீர்த்தி பிரதாபமும் ஐஸ்வரியமும் ஆடையாபரணமும் இலாபமுண்டாம் பனிரண்டாமிடத்திலிருந்தால் வெகுசேதம் தன நாசம் வெகுபீடையும் சஞ்சாரமுண்டாம் 30-க்கு மேல் பட்ட பரலிருந்த ராசிகளில் வீடுவாசல் தொழுகூட முதலானவை எல்லாஞ் செய்யவும் முகூர்த்தங்கொள்ள நன்று இந்த ராசிகளில் நவக்கிரகங்கள் வரினும் அந்த ராசி யாதிபதி அந்த ராசியிலிருந்த கிரகமாவது வரினும் இவர்கள் திசையபகார சித்திரங்கள் வரினும் நன்றுபரம் குறைந்த ராசிகளுக்கு தக்கதாய் சமனமத்திபம் அகமம் அதமா அதமால்லவும். செம்பலன்

லக்கினத்திலே எத்தனை பரலிருந்ததோ அத்தனை வருஷம் சுகத்தை அனுபவிப்பான் சஷ்டாட்டம் விய ராசியல்லாமல் மற்ற ராசிகளில் அதிக பரல்கொடுத்த ராசிக்காற்றை சினேகிக்ர் அந்த ராசியில் சுபகருமம் செய்ய அந்த ராசி மாதங்கள் வரமிகுதியும் நன்மையுண்டாம் 25 - க்குமேல் 30 - பரலுக்குள்ளாக யிருந்தால் சமபலன் 25- க்கு கீழ்ப்பட்டால் மத்திபபலன் 20 - க்கு கீழ்ப்பட்டால் அதமபலன் கடினமடையும் தரித்திரமும் உண்டாம் இவைகள் திசையபகாரங்கள் சித்திரங்கள் வரினும் கஷ்டபலன் 10 - மிடத்திலிருந்த பரலுக்கு 12-ம் மிடத்தில் பரல்குறைந்தால் கொஞ்சசிலவாயிருக்கும்

10-11-12 மிடம் இந்த ராசிகளிலிருந்த பரலுக்கு லக்கினத்தில் பரல் மீரியிருந்தால் போகவானுயும் அற்பவானுயுந் தேசமெல்லாம் புகழ வாழ்வான் வாக்குசெல்லும் இதில் குறைந்தால் தரித்திரம் அனுபவிப்பான்லக்கினுதிபதிக்கு பூர்வ சாஷ்டாட்டத்தில் சுபகிரகமிருந்து அமறபட்சத்தில் பாபகிரக மீரியிருந்தால் பாவபலன் சொல்லுக.

---

## கண்டத்திரைய பலன்.

மீன மேஷ ரிஷப மிதுன நாலு ரசியிலுமிருந்த பரலை ஒன்ருகக் கூட்டுவது பிரதமை கண்டம் கடகம் சிங்கம் கன்னி துலாம் இந்த நாலு ருசிபரலையும் ஒன்ருய்க்கூட்டுவது துதிகை கண்டம் விருசூகிகம் தனுசு மகரம் கும்பம் இந்த நாலு ரசிபரலும் ஒன்ராய்க்கூட்டுவது திருதிய கண்டம இந்தபடிக்கி கண்டத்திறையஞ்செய்து வைத்துக் கொண்டு பலன் சொல்லுக முதற்கண்டத்துக்கு இரண்டாம் கண்டம பால் மீறி இரணடாங் கண்டத்துக்கு மூன்ருங்கண்டம் பால் மீறியிருந்தால் எக்காளயோகம் வயசு ஏடக்க பாக்கியமும் ஆபிசு வர்த்தனை யுண்டாம்.

முதலுங்கடையும் குறைந்து நடுமீறில் மத்தளயோகம் சங்கீதவித்தை விநோத பிரியமும் மத்திய வயசில் பாக்கியமும் உண்டாம் மூன்றும் ஒருசமனுக யிருந்தால் பேரிகை யோகம் சர்வபாக்கியமும் எப்போதும் உண்டாம் நடுக்குறைந்து கடைதலைமீறில் டமரயோகம் முன்னும் பின்னும் சர்வபாக்கியமுமுண்டாம்.

கண்ட திரையபலன் முற்றிற்று.

---

## திக்குபலன்.

மேஷரிஷப மிதுனம், கிழக்கு கடகஞ் சிங்கம் கன்னி, தெற்கு துலாம் விருட்சிகம் தனுசு மேற்கு, கர கும்ப மீனம் வடக்கு,

இந்த படிக்கி அந்த நட்சத்திரத்துக்கு பரலை ஒன்ருய்க்கூட்டி அதிகப கலிருந்த திக்கில் போக்கு வருத்து கொடுக்கல்வாங்கல் வெள்ளாமை செய்ய வர்த்தனை யுண்டாம் பரல்குரைந்ததிக்கில் நினைத்த காரியஞ் சிதையும் விசேஷபலன்.

ஆதித்தநின்ற ருசிமுதல் சந்திரநின்ற ருசிவரைக்குங்கண்டபரலை ஒன்ருய்க்கூட்டி 7-ல் பெருக்கி 27-ல் கழித்தாவுவருஷத்தில் மிருத்திகளால் லாபம் துன்பம் வாக்கு விரோதம் சந்திரனின்ற ருசிமுதல்த்கினம் வரைக்கும்உள்ளபரல்களைக்கூட்டி 7-ல் பெருக்கி 27-ல் கழித்து நின்ற சேஷவருஷத்தில் சத்துருரோகம் சுரம் பயம் புதன் வியாழன் சுக்கிரனிவர்கள் நின்ற ராசிமுதல் லக்கினம்வரைக்கும் விழுந்தபரலை தனித்தனியே கூட்டி 7 ல் பெருக்கி 27-ல் கழித்து நின்றசேவருஷத்தில் புத்திர மித்திர களத்திரந் தனதானியம் பந்துஜனக் கூட்டுறவு உண்டாம் அஷ்டமாதிபதி நின்றராசிமுலல் லக்கினம் வரைக்கும் நின்றபரலைகூட்டி 7-ல் பெருக்கி 27 ல் கழித்து நின்ற மிச்சத்தில் அஷ்டமத்து பரல்கொண்டு 12-ல் பெருக்கி கண்டதை 27 ல் கழித்து நின்ற சேட மேஷாதியாக யெண்ணிக்கண்ட ராசியில் ஆதித்தன்வருங்காலம் ஜாதகன் நிறியாணம் திரிகோணத்திலு மறிந்து சொல்க.

வியாழன் சனி சூரியன் இந்த மூன்றுகிரகத்துக்கு மேஷாதியாக மீனம்வரைக்கும் இந்திந்த ருசியில் இத்தனை பரலென்றிந்து 16-க்கு மேல் 24 பரல் வரைக்கும் நின்ற ருசியிலிவர்கள் வருங்காலம் சாதகனுக்கு ஆயிசு வர்த்தனையும் அறம் சவுக்கியமும் அர்த்தலாபமும் சுபங்களும் நடக்கும் 12- பரலுக்குமேல் பரலிருந்தராசியிலிவர்கள் வரில்மத்திபம் பலன் இதற்கு கீழ்ப்பட்ட ருசியில் வருங்காலம்தேகபீடை அறம பயம் சஞ்சலம் சேதம் நடக்கும் சந்திரன் செவ்வாயிவர்கள் பரல்-16க்குமேல் 24 வரைக்கும் இருந்த ராசியிலிவர்கள் திசையபகராசித்திரங்கள் வரினும் மிதிர் வழிச்சந்தோஷம் சகோதர வழி சந்தோஷம் 9-முதல் 15. பரவி ராசியில் வரில் மத்திமபலன் இதற்கு குறைந்த ராசிகளில் வரில் பிதாவுக்கு தேகபீடை சகோதிரவழி துக்கமுண்டாம் சந்திரன்செவ்வாய் பரல்-12-க்குமேல் 16-வரைக்கு விழுநதராசியில் இவர்கள் வரில் பெந்து வழியில் சந்தோஷம் பசுவாதிலாபமுண்டாம் 8க்கு மேல் 11-பரல் வரையிலிருந்தால் துக்கமும் பசுவாதி சேதமும் துக்க

மு டலேச்சலுண்டாம் சந்திரன் வியாழன் இவர்கள் அதிக பரல் கொடுத்த ருசியில் வருங்காலம் புத்திரர்க்கு கலியாணம்சுபசோபன் நன்மை தனக்கு ஆத்ம சுகம் ஞானசிந்தையும் புத்தி சாதுரியமும் ஆரோக்கிய முண்டாம் பிரந்தராசியில் வரில் புத்திரபீடையும் புத்திர பிருந்தியமும் முதலான விபரீதமும் நடக்கும் இவர்கள் திசையபகாரங்களிலும்நடக்கும்.

---

## மாதாபலன்.

ஆதித்தன் அஷ்டவர்க்கத்தில் மேடாதி மீனவரைக்கும் விழுந்த பரல் இந்திந்த ருசியி லின்னரின்னர் கொடுத்த பரலென் றறிந்து மாதம் 30-நாளையும் இருந்த பரலுக்கு கொடுத்துஒருபரலுக்கு இவ்விளவு யீவுயென்றறிந்து சுபனுக்கு சுபபலனும் பாவிக்கு பாபபலனும் சொல்வது மற்ற அஷ்டவர்க்கத்துக்கும் இந்த ஆயுற் ருயம் சர்வாஷ்டவர்க்கம்சோத்திய சேடத்தை உபயகுணகாரத்தை 7-ல் பெருக்கி 12-ல் கழிக்கவும் யெல்லாமரிபட்டுபோனல் 12 ல் வைத்துக் கொள்ளவும் இவர்களை முன்போலே 27-க்கு ஈந்து யீவுவருஷம் நின்றசேடம் 12-ல் பெருக்கி 27-ல் கழிக்க மாதம் சேடம் 30 ல் பெருக்கி 27 ல் கழிக்க நாள் சேடம் 60-ல் பெருக்கி 27 கழிக்க நாழிகை வருஷம் மாதம் நாள் நாழிகை நட்சத்திரம் இரவி மண்டலமென்றுபேர் வருஷம் 100-க்குமேல் பட்டால் 100-ல் கழிக்கவும் நின்றதை 12 ல்பெருக்கி இத்துடன் முன் கண்ட மாதத்தையுங் கூட்டி 337-ல் பெருக்கி 365-ல் கழிக்க பெற்ற பலன் நாழிகையாம் இதை 60 -ல் ஏரிடநாள் 30 ல் ஏரிடமாதம் 12 ல் ஏரிட வருஷம் இது பரமாயுமாதங்கள் என்று அறிவது.

---

## இராயதேவர் அஷ்டவர்க்கபலன்.

சொல்லுவேன் லக்கினத்தில் பரல்தானென்று
சுருதியாயிருந்திடவே பிரந்தபாலன்

அல்லவேவயதஞ்சில் தத்துண்டாகும்
அன்பாகமுடிசுருண்டால் வயதுதீர்க்கம்
மெல்லவே தந்தைக்கி நோயைக்காட்டும்
வீணிலேவயதுபத்தில் கொல்லும்பாரு
அல்லவேபாக்கியவான் மூற்கனன்பன்
அடுத்தவரைரெட்சிப்பனறிவுள்ளானே. (1)

அறிவான லக்கினத்தில் பரல்தான்ரொண்டு அதிலுதித்தால்குழந்தைக்கு வயது அற்பம், செரியான தந்தைக்குவயதுமூன்றில் நீங்காதசரைமூடி கொல்லும்பாரு, குரியானமுரடனவனிரத்த கண்ணன் குசமசக்கமுள்ளவனும் கொஞ்சம்புத்தி, தெரிவாகப்பெண் மீதிலாசையுள்ளான் திரவியங்கள் தேடவல்லன் சித்தன்றனே. (2)

சித்தனே லக்கினத்தில் பரல்தான்மூன்று சேர்ந்திருந்தால் பிறந்தபிள்ளை வயதுதிர்க்கம், மத்தனுய்த் தாய்தகப்பன் சுகமதாகும் மைந்தன்வன்பாக்கியங்கள் வளரவுள்ளான், உத்தசனபெறுக்கமுள்ளான் பெருமைவானும் உலகத்தில்யாவருமே நல்லோனெனன்பார், சத்தியவாக்குடையவன் காண் பூமிலாபம் தயவான பெரி யோர்கள் உறவுள்ளோனே. (3)

உள்ளதுவேலக்கினத்தில் பரல்தான்நாலு உதித்திடவே பிறந்தபிள்ளை ஒத்தைக்கண்ணன், கள்ளமொழி பேசவல்லன் வயதுநாலில் கடுந்தத்து உண்டாகும் கடந்து தானல், மெள்ளவேயிருபதிலே கொல்லும்பாரு மெய்யாக அது கடந்தால் வயதுதீர்க்கம் தள்ளாது அய்யஞ்சு வயதுதன்னில் தந்தைக்கு உயிர்ச்சேதம் தப்பிடாதே. (4)

தப்பாது லக்கினத்தில் பரல்தானஞ்சு தானிருக்க வந்தமைந்தன் றனக்குக்கேளு, சற்றுமேபாலனுக்கு மூப்பதானல் தந்தையது மரணமது தப்பிடாது, முற்றுமேவியாபாரம் பெருத்து வாழ்வான் முன்பின்னும் ஆய்ந்துமபசவல்லன், கொற்றேடே சனங்களையும் வைத்துவாழ்வான் குணமாகும் யார்பேர்க்கும் வணக்கமானே. (5)

வணக்கமுள்ளான் லக்கினத்தில் பரல்தானுறு வந்துதித்தால் பிறந்தபிள்ளை மரணமாகும், இணக்கமுள்வான் தந்தைக்கிபந்து

மாகி யிடஞ்சலதுவுண்டாகு மரணமாகும், மணக்குமே மாருகண்ணன் பூமிபாலன் மண்ணிலேதிரவியங்கள் கண்டெடுப்பான், ருணக்கமில்லை யார்பேர்க்கு யிணக்கமுள்ளான் குணமுள்ளான் மணமுள்ளான் கூறுவேனே. (6)

கூறுவேன்லக்கினத்தில் பரல்தானேழு கூடியே னின்றிடவே பிறந்தபிள்ளை, வீருடனேபதினைந்து வயதுதன்னில் வினையாகபிதிர் மரணமேவிப்பாரு, சிருமேகோபமுள்ளா னசடனுகும் திரவியங்கள் தேடவல்லன் கூத்திக்கள்ளன், ஆருவேமுற்கோபி புத்திமானும் அழகாளவடிவுள்ளான் அற்பனுமே. (7)

அழகானலக்கினத்தில் பரல் தானெட்டில் அதில்பிறந்தபிள்ளை யது அழிந்துபோகும், விரசுடனே சாகாமலிருக்குமாயில் வினையானகு மூந்தைவயதாரில் மூன்ற, துரிதமாய்தர்தையது மரணமாகும் துஷ்டனுயிருந்திடுவன் களவுசெய்வான் பரிசமாயுள்ளவனுஞ் சிலம்பககாரன் படிப்புளான் மந்திரங்கள் பலிக்கும்பாரே. (8)

## குடும்பஸ்தானம்.

மந்திரங்கள்படிக்குமது குடும்பஸ்தானம் வணங்கிநின்றபாலதுவுமொன்றேயானல் சிந்தாதசெனங்களெல்லாம் சிந்திக்காணும் திரமிடனேமுதுமையெல்லாஞ் சேதமாகும், முந்தருவ திரவியங்கள்சேதமாகும் முறையில்லாபுத்திகளுே மன்புமாகும், யெந்தவிதமாஞுலும் வழக்கு வெல்லும் யெடுத்திடுவனுயுதங்கள் திரமுள்ளானே. (9)

திரமானவருங்குடும்பஸ் தானந்தன்னில் செல்லு பாலிரண்டானல் பிறந்தபாலன், உரவானகுடும்பமது வாழ்வுண்டாகும் மடந்தையார் மனிதர்மக்கள் பெருகிவாழும், நிரவான்காண் பொய்சொல்ல விரும்பமாட்டான் நேரியோடேபெரியோரை யடுத்து வாழ்வான் மரவாமல் யார்பேர்க்கும் பட்சமுள்ளான் வஞ்சனின வில்லாதான் பெரியோன்றனே. (10)

பெரிதானவருங்குடும்ப ஸ்தானந்தன்னில் பேசரியமூன்றுபரல் பிலக்குமாகில், விரிவாகபிறந்தபிள்ளை வயதுஓன்றில் விரும்பியே குடும்பமது சுருங்கிகாணும், மரிதாகமாட்டுக்குச் சேதமாகும் அவனுக்கு கலியாணமுடியும்போது, தெரியாது மணப்பந்தல்வெந்துபோகும் திரமுள்ளான்வலுவுள்ளான் தீர்க்கவானே. (11)

தீர்க்கமாய்வருங்குடும்ப ஸ்தானந்தன்னில் சென்றபரல் நாலிருந்தால் பிறந்தபாலன், ஆக்கமுள்ளான் வயதுமது தீர்க்கவானும் அன்னைபிதாசுகமுள்ளான் குடும்பமெல்லாம், யோர்க்கவே யாதரிப்பன் வாழ்வுள்ளான்கா ணெடுத்தெடுத்ததொழிலெல்லாம் பலிதமுள்ளான், மூர்க்வான்யாவருக்கும் முதன்மையாவான் முன்பின்னும் வழக்கரிந்து பேசுவானே. (12)

பேசியேவருங்குடும்ப ஸ்தானந்தன்னில் பிலமாகபரலஞ்சில் பிறந்தபாலன், கூசியேயிருந்திடுவான் சபையில் செல்லான் குடும்பத்தில் சேதம் வரும்குறையும் வாழ்வு, தாசிகளைவிரும்பி நிற்பான் சமத்தனுவன் தனந்தேடி யழிக்கவல்லன் தற்மபுத்தி, ஆசரிப்பான் பலமுதலுந் தேடிக்கொள்வான், அவன்கள்ளனென்பதுவு வறிந்திடாரே.

அரிவான வருங்குடும்ப ஸ்தானந்தன்னில் ஆறுபரலிருந்திடவே பிறந்தபாலன், சூரியுள்ளான்குடும்பமது சேர்க்கையுள்ளான் குணமாக ஆசரிக்கவல்லானுகும் நெறியுடனே யிருந்திடுவன் பெண்கள்மீதில் நினவொருநாள்வையான் காணசலைத் தேடான், பிரியமாய்பெரியோரை யடுத்துவாழ்வான் பொல்லாத நினைவெல்லா மாற்றுவானே. (14)

மாற்றுமே வருங்குடும்பஸ்தானந் தன்னில் வந்தபரலேழானல் பிறந்தபிள்ளை, தோற்றுமே குடும்பத்தில் சேரமாட்டான் சொல்லுக்குமடங்காத துஷ்டனுவான், போற்றுமே தெய்வநெறி யுள்ளானுவான் பூமியிலே பலிதமுள்ளான் பொருதிமானும், காத்திடுவானடைக்கலத்த தவறமாட்டான் கண்டமொழி கேட்டமொழி யடக்குவானே. (15)

அடக்கவே வருங்குடும்பஸ்தானந்தன்னில் அரிந்தபரலெட்டிருக்கில் பிறந்தபிள்ளை, முடக்குமே ஊமைபோலிருக்கும்பாரு முன்னுள்ள குடும்பமது சேதமாகும், மடக்குமேநோயுள்ளான் குணரூபந்தான்லஞ் சநினைவுள்ளவனும் வருமையாளன், நடக்கவே காலோயும் வினையுமுள்ளான் நல்லகுணம் பொல்லாத குணமுள்ளானே. (16)

# சகோதரஸ்தானம்.

குணமான சகோதரஸ்தானந்தன்னில் குறைவில்லாபரலொன்று யிருக்குமாகில், இனமாகபிறந்தபிள்ளை தனக்குமூத்தே யிருந்தபிள்ளை சேதம் வருந்தாய்க்குநோயாம், மனமான தகப்பனுக்கு யிடஞ்சலுண்டாம் வம்பனவன்துஷ்டனவன் வணங்கமாட்டான் பணந்தேடி யழித்திடுவன் கசடனுகும் பண்பாவினனையமுள்ளான் பசியனுமே. (17)

பசிபொருன் சகோதரஸ்தானந்தன்னில் பாலிரண்டுயிருந்திடவே பிறந்தபாலன், கசியவேபின்பிறந்த விரண்டுஞ்சேதம் கலியான மூடிந்தமனே தீயில்வேகும், வசியவே பொருதியில்லான் வெடுவெடுத்தோன் வம்பனும் யிறப்போர்க்கு யீயவல்லான், மூசியவே வாழ்வுள்ளான் வியாபாரங்கள் முழுதுமே பலிதமுள்ளான் கடினவானே.

கடினமது சகோதரஸ்தானந்தன்னில் கருத்தான பரல்மூன்றில்பிறந்தபிள்ளை குடிகாரனுயிருப்பான் தாய்க்குநோயாங் குணமான பாக்கியங்கள் கோடியுள்ளான் முடிவான் கனவழக்கு வெல்வன கோருஞ்சொல்வன் முக்கியமாய் வியாபாரம் வளருந்தானே. (18)

வளருமோ சகோதரஸ்தானந்தன்னில் வருநாலு பரலிருக்க பிறந்தபாலன், வளருமே பாக்கியங்கள் பெருகிவாழ்வன் மைந்தனுடபிரவியெல்லாம் சுகமதாகும், அளருமேமுற்கோபி யிரங்கும் பின்னுல் அள்ளனபிதா சுகமுள்ளானன் பற்கன்பன், குளறுவான் வாய்மூப்பன் கொள்ளையுள்ளோன் குற்றமதுபெருத்திடுவன் குட்டைதானே. (20)

குட்டையன்றுன் சகோதறஸ்தானந்தன்னில் குணமான பரலஞ்சுயிருக்குமாகில், சட்டமாய்ப்பிறந்தபிள்ளை பிரவியெல்லாம் சந்தோஷமாயிருந்து வாழும்பாரு ஒட்டாது குடும்பத்தில் சேரமாட்டான் ஒதுங்கியே திரிவான்காண் தகப்பனேயாங் கட்டாண்மை செய்திடுவாங் கடுத்தநெஞ்சன் கைமுதலு மீயாதகடுத்தந்தானே. (21)

கடுத்தமுள்ள சகோதரஸ்தானந் தானந்தன்னில் சருத்தான பரலாவ யிருச்குமாகில் தடுத்துமொழி பிரந்தபிள்ளை தமிழில் தீர்க்கன் சகோதரங்கள் ஒன்றிரண்டுதக்கும்பாரு, யெடுத்தெடுத்ததொழிலெல்லாம் பலிதமாகும் யின்பதுன்பமுள்ளானிடும் புக்காரன்கொ

டுத்திடுவான் தானதர்மஞ்செய்யவல்லன் குணமாக யிருந்திடுவன்குரை யுள்ளானே. (22)

குரையாதசகோதர ஸ்தானந்தன்னில் குறைவில்லாபரலேழுயிரு ந்தபாலன், நெரையாகபிரவியுள்ளான் பாக்கியவானும் நினவெல்லாபேத மாயிருந்துவாழ்வான், பரையான்காண்பொய்பொருதான் மெய்யனுவா ன், பண்டிதங்கள்மந்திரங்கள் படிக்கவல்லான், இரையோனைவணங்க வல்லன் பூசைசெய்வா னீசுரனைவணங்கவல்லன் யேழைதானே. (23)

ஏழைதான் சகோதரஸ்தானந்தன்னில்யிருந்து பரலெட்டானுல் பிறந்தபாலன், கோழைதான்மனதுள்ளான் கபடனுஞ்சும் குத்தமதுபொ ருக்கரியான் குணக்கேடாகும், வேளையது பார்க்கரியான் புத்திகேடன் வேதனெரியறியாத மடையனுவான், பேழைவயருள்ளவனு மந்தபேச்ச ன் பெருமையாயிருந்திடுவன் சிருமைதானே. (24)

---

## மாதுருஸ்தானம்.

சிருமையாய்வருமாதா ஸ்தானந்தன்னில் சேர்ந்தபரலொன்றுன ல்பிறந்தபிள்ளை, வருமையேமிகுத்திருக்குந் தாய்க்குநோயாம் வந்தவுட ன்மாதாவு மரணமாகும், பொருமையில்லா வெடுதெத்தோன் புண்ணி யமெய்யோன் பொங்கமுடன்வருவான்காண் பூமிபாலன், வெருமை யேயிருந்திடுவன் விசாரமுள்ளான் வேகமுள்ளோன் சோபமுள்ளோன் வெரியன்றனே. (25)

வெரியன்றன்வருமாதா ஸ்தானந்தன்னில் விரும்பிநின்றபரலது வு மிரண்டேயானுல், பிரியமாய்ப்பிறந்தபிள்ளை மாதமாரில் பின்னுமே தாய்சேதம் நோயனுவான், குரியானபேச்சுரைப்பன் குத்தங்கொள்வா ன் குணக்கேடனுயிருப்பன் மிகுந்தசெல்வன், நெரியெல்லாந் தவரிநிற் பன் நீசன்பித்தி நெட்டூரமாருது பெரும்பந்தானே. (26)

பெருப்பந்தான்வருமாதா ஸ்தானந்தன்னில் பிசகாதமூன்று பரல் பிறந்தபாலன், விருப்பமதாய்தனக்கு மிகுத்தநோயாம் விளங்கவேவய தெட்டில் தாயைக்கொல்வான், நெருப்பான கோபமுள்ளானுர்க்கு

மஞ்சான் நெஞ்சடக்கமுள்ளவனே யிரக்கமில்லான், நஞ்சானபே ச்சுரைப்பன் கொடுஞ்சொல்லாளன் நல்லகுண மில்லாத நம்பி தானே. (26)

நம்பிவருமாதுரு ஸ்தானந்தன்னில் நாலுபரலிருந்திடவே பிற ந்தபாலன், வெம்பியேவயதஞ்சில் தாயார்சேதம் வேணுமென்றமங் திரங்கள் சித்தியாவான் சம்ப்மேபேச்சுரைப்பான் முற்கோபியா வான் தானதர்மஞ்செய்திடுவன் சத்தியவானும், வெம்பியருளுள்ளவ னும் பாக்கியவானும் விளங்கவேதிரவியங்கள் தழைத்துவாழ்வான், ()

வாழ்வுள்ளான்வருமாதா ஸ்தானந்தன்னில் வருமைந்துபரலிருந் தால் பிறந்தபாலன், தாழ்வில்லான்வாழவே சமத்தனுவான் தாய் மரணம்பதினைந்து வயதுதன்னில், மீளவேஆயுதங்கள் பிடிக்கவல்லன் வேணுமென்ற சாஸ்திரங்கள் படிக்கவல்லான், ஆளவே அடிமைமுதல் சேர்த்தியுள்ளான் அஞ்சாதனெஞ்சனவன், அதிபன்றானே, (28)

அதிகமாய்வருமாதா ஸ்தானந்தன்னி லாருபரலிருந்திடவே பிறந் தபாலன், சதிவாகபிறந்தவுடன் தாயும்சேதம் தப்பினல் தாய்க்குவெகு நோயுண்டாகும், பதிவாகபருவத்தி லிருந்துவாழாள் பட்சமுள்ளபேர் களெல்லாம் பகையாய்நிற்பன், விதியுடனே வாழ்வேறவுள்ளவனாகும் மெய்சொல்வான் பொய்யொருநாள் சொல்லானே. (29)

சொல்லிடவேவருமாதா ஸ்தானந்தன்னில் துலங்கிநின்றயேழு பரல் தோன்றும்பிள்ளை, சல்லியத்துக்குடையவனே புத்திகொஞ்சம் சம்பத்துபாக்கியங்கள் தழைத்து வாழ்வான், மெல்லியர்மேலாசை கொள்வான் கூத்திக்கள்ளன் விளங்குவயதிருபதிலே தாயும்சேதம் துல்லிபமாய் தனதுகஷ்ட மிரப்போர்கியோன் சுமுகனாயிருப்பன் துக்கவானே. (30)

துக்கமாம்வருமாதா ஸ்தானந்தன்னில் சொன்னபரலெட்டிருக்க பிறந்தபாலன், வற்கசனசேகரமா யிருந்துவாழ்வான் மாதாவை நோயாக வைத்துவாழ்வன், பக்கமேஅசல்தாரந் தேடவல்லான் பலபலவிசாரமா யிருந்துவாழ்வான், தக்கதொருசாஸ்திரங்க ளறியமாட்டான் தயவுதண் மையில்லாத சண்டிதானே (31)

# புத்திரஸ்தானம்.

சண்டிதான்வரும்புத்திர ஸ்தானந்தன்னில் தனித்தபரலொன்றி ருந்தால் புவியின்மீது, கண்டிதமாய் பிறந்தபிள்ளை மடயனுகும் கடுஞ் சொல்லன் வெடுவெடுத்தகுணமுள்ளான்காண், பண்டிதர்கள் பலிதமு ள்ளான் மந்திரவாதி பட்சமுள்ளபேர்களையும் பகைத்து நிற்பன், அண்டிவந்த பேர்களையும்கார்த்துக் கொள்வா னன்பானபெரியோர்க்கு அடிமைதானே. (32)

அடிமைதான் வரும்புத்திர ஸ்தானந்தன்னில் அன்பானபரலிர ண்டியிருக்குமாகில், கொடுமையது செய்யரிவான் தர்மஞ்செய்யான் குற்றமதுபொறுக்கரியான் குணக்கேடாவான், கெடுதிகளேபேசிடுவன் வழக்கு தோர்ப்பன் கெடிதானமாமனையும் யிழந்துநிற்பன், தொடுவ மூக்குக்கைக் கூலிவாங்கவல்லன் சொல்லுக்குமஞ்சாத சுழியன்ருனே.

சுழிவானவரும்புத்திர ஸ்தானந்தன்னில் சுகமானபரல்மூணு யிருக்குமாகில், அழிவானவழக்குரைப்பன் மாமனில்லான் அகந்தைய துபேசவல்லன் அசடனுகும், விழினுதல்மேல் ஆசையுள்ளான்ஞேய னுவன் மெத்தவேசத்தியத்துக் கஞ்சமாட்டான், தெளிவான புத்தியில்லான் கடுத்தமூர்க்கன் செல்வாக்குபாக்கியங்கள் தீர்க்கந் தானே. (34)

தீரன்வரும்புத்திர ஸ்தானந்தன்னில் சென்றபரல்நாலதுதா னிரு க்குமாகில், சூரனுயிருந்திடுவன் மாமன்சேதம் சுகமானபாக்கியங்கள் பெருக்கமுள்ளோன், ஆரவங்கள்செய்வான் யெதிர்த்துநில்லான் அல் லலேபெருத்திருப்பான் பூமிபாலன், பாரமேபுத்தியில்லான் மறந்து பேசான் பட்சமுள்ளபேர்களையும் பகைப்பன்ருனே. (35)

பகையானவரும்புத்திர ஸ்தானக்தன்னில் பரலஞ்சுயிருந்திடவே பிறந்தபாலன், துகையாகமாமனுள்ளான் பிரவியுள்ளான்சுகமதாய்தாய் தகப்ப னிருந்துவாழ்வான், வகைவகையாய் திரவியங்கள் தேடவ ல்லன் மங்கையரைவலதழிக்க கூத்திகள்ளன், செகமெல்லாம் நல்லவ னென்றுலகஞ்சொல்ல சிமனுயிருந்திடுவன் யிரங்குவானே. (36)

இரங்குவான்புத்திர ஸ்தானந்தன்னில் யிருந்தபரலாரிருந்தால் பிறந்தபிள்ளை, கிரங்குலையரோயுள்ளான் மாமன்சேதம் நெஞ்சிரக்கமில் லாத நெலடனுவான். பிரங்கேடுபேசிடுவன் சூத்திகள்ளன் பெரியவ ரைபகைத்திருப்பன் பெருமையுள்ளான். அறப்பாடவல்லவனே யிரப் போர்க்கியான் அன்னைபிதாசுகமாக யிருப்பன்பாரே (37)

இருக்குமேவரும்புத்திர ஸ்தானந்தன்னில் யிசையவேயேழுபர லிருக்குமாகில், சுருக்காகபிறந்தபிள்ளை பாக்கியவான் துன்பமில்லாயி ன்பமது பெருகிவாழ்வான், பருகவேதிரவியங்கள் தேடவல்லான் பகையாகயிருந்தவரை பட்சங்கொள்வன், நெருக்கமாய்சனக்கூட்டம் குடும்பசாலி நித்தநித்தமாதாயம் வருகும்பாரே. (38)

வருத்துமேவரும் புத்திர ஸ்தானந்தன்னில் வகையானபரல் எட்டுயிருக்குமாகில், பெருத்ததொருவாழ்வெல்லாம் குரைந்துகாணும் பிரவிகளும் சேதம் வருமலடனுகும். உருத்தான பேர்களெல்லாம் பகையுமாகும் உலகத்தில்பகையாக யிருந்துவாழ்வான், கருத்தான புத்தியெல்லாமரந்துநிற்பான் கால்கையில்முடமுள்ளான் கவலைபானே.

# ரோகஸ்தானம்.

கவலையாய்வரும்ரோக ஸ்தானந்தன்னில் கருத்தானபரலொன்று காணுமாகில், உவலைபாய்பிறந்தபிள்ளை யிரந்துபோகும் உண்மையாயி ருந்தாலுந் தாயும்நோயாம், அவகுணங்களாயிருப்பன் புத்திகொஞ்சம் அடிபிடிக்குமஞ்சாத வீரமுள்ளான், நவமணிகள் தேடவல்லா னழிக்க வல்லான் நல்லபுத்தியில்லாத நயனவானே. (39)

நயவாகவரும்ரோக ஸதானந்தன்னில் நல்லபரலிரண்டிருந்தால் நயனரோகம், பயமுள்ளான்பிரவியுள்ளான் தாய்தகப்பன்பதிவாக தை த்திருப்பன் பாக்கியவானும், செயமுள்ளான் வழக்குளவன்பூமிபாலன் திரவியங்கள் தேடவல்லா னழிக்கவல்லான் மயமானதையல்நெரி யுள் ளானுகும் வணக்கமுள்ளான்சத்தியவான் வடிவன்றுனே. (40)

வடிவானவரும் ரோகஸ்தானந்தன்னில் வந்த பரல்மூன்றிரு ந்தால் பிரந்தபாலன், வெடியனுயிதிந்திடுவன் வம்புசெய்வன் வினை மேலேவினைநினைப்பன் தகப்பநொயாம், துடியான தன்குடும்பமல

ச்சலாகும் சொல்லுக்குவல்லவனே அச்சமுள்ளான், கொடிதான சொல்லுடையான் சூத்திக்கள்ளன் குணக்கேடன் மனக்கேடன் குலத்துள்ளானே. (41)

குலமாகவரும்ரோக ஸ்தானந்தன்னில் குணமுடையபரல்நாலுயிருக்குமாகில, பிலமாகயிருந்திடுவன் அஞ்சமாட்டான் பெருவாழ்வு உள்ளவனுங் குடும்பந்தன்னில், அலையவேநோய்மிகுதி அல்லலுள்ளான் அஞ்சாதவழக்குவெல்லுங் சூத்திக்கள்ளன், சிலைமதன்போலழகுள்ளான் திறகவானும் திரவியங்கள் தேட்வல்ல னளிவுதானே. (42)

அழியாதவருரோக ஸ்தானந்தன்னில் அஞ்சுபரலிருந்திடவேபிறந்தபாலன் குளிவாகயிருந்திடுவன் வழக்குவெல்லன் குற்றமெல்லாம் பிழைபொருப்பான் பெருத்தவாழ்வன், யெளியவரைக் கார்த்திடுவன் யேங்கிநிற்பன் யெப்போதும் பால்பெருக்க மிருக்கும்பாரு, தெளிவாகயிருந்திடுவன் பேச்சுமூப்பன் சேவுகத்தில் பெரியவனே திரமுள்ளானே. (43)

திரமாகவரும்ரோக ஸ்தானந்தன்னில் செல்கின்றபரலாறில் பிறந்தபிள்ளை, இரவாமலிருந்தாலும் நோயினுலே யிடஞ்சலைஉண்டாகியிருக்கும்பாரு, மரவாமலிருந்தசன மகன்றுபோகும் வல்லமைகள்பேசிடுவன் யெதிரிதோர்பான், உரவாகயிருப்பவர்கள் பகையுமாகும் முத்தனம்நோயினு விரக்கும்பாரே. (44)

பாருநீவருரோக ஸ்தானந்தன்னில் பரலேழுயிருந்திடவே பிறந்தபிள்ளை, ஆருமேநிகரில்லாப் பெரியோனென்பான் யனேகமாய் வாழ்வுள்ளா னரசுசெய்வன், சீருமேசிரப்புள்ளான் பாக்கியவானுந் திடமான தாய்தகப்பன் ஞேயில்லான்காண், பேருமேபெருமையுள்ளான்பேச்சுக்காரன் பிலமாகக்குணமுள்ளான் பெரியோனுமே. (45)

பெரிதாகவருரோக ஸ்தானந்தன்னில் பேசரியபரலெட்டுயிருந்தால்பிள்ளை, அரிதாகயெப்போது நோயால்வாழ்வான் அடமாகபுத்தியுள்ளான் பேச்சுக்காரன், சரியாகமல்லுக்கு வீரசூரன் தானெதிர்த்தபேருக்கு தோர்வையாகான், நரியெத்துமாப்போலே யெத்திவாழ்வான் நல்லகுணமில்லாத பொல்லான்றனே. (46)

## களத்திரஸ்தானம் பின்னால்வரும்.

தேவேந்திரன் காண்டாவனமொன்று பூமியிலே யுண்டுபண்ணிவைத்தார் அதற்க்கு வியாசபகவான் ஒரு முகூர்த்தமிட்டார் அந்தவனம் முழுவதும் வெந்துபோயிற்று அப்போது தேவேந்திரன் அவரைப் பார்த்து நாம் நல்லவேளையில் முகூர்த்தமிட்டு பூந்தோட்டம் உண்டுபண்ணிவைத்தோம் அது வெந்துபோக காரணமென்னவென்றுகேழ்க்க அப்போது வியாசபகவான் எல்லோருக்கும் விதிக்கிறதுபோல் விதித்தோமென்று சொன்னார் அப்போது சுக்கிரபகவான் தேவேந்திரனுக்குசொல்லுகிறார் வியாசபகவான் விதித்தமுகூர்த்தம் நாளொன்றுக்கு விதித்தார் அது நாழிகைக்கு ஒருகாரியம் பலிதமாயிருக்கும்ஆகையால் வெந்துபோயிற்று யென்றார் அப்போது தேவேந்திரன்சுக்கிரபகவானை முகூர்த்தம் விதிக்கும்படி கேட்டுக்கொண்டார் அப்போது சுக்கிரபகவான் விதிக்கிறவிதங்காண்க, நாயிற்றுக்கிழமை முதல் நாழிகை விசாக நட்சத்திரமுதலாக தொடுத்து சூரியபகவானுக்கு ஏழுவாரத்திற்கு பலாபலன் பேதமாயிருக்கிறதை சொல்லுவார் ஞாயிற்றுக்கிழமை சூரியபகவான் உதயமுதல் விசாகநட்சத்திரமாக கோள்களை யிந்தப்படிக்கி இரவுபகல் பார்த்துக்கொள்ளவும்.

## ஞாயிற்றுக்கிழமை 30 நாழிகை பலன்.

1 - விசாகம் வழக்கு கேழ்க்கநல்லது
2 - அனுடம்-லாபம்.
3 - கேட்டை-கலாபம். (டாம்
4 - மூலம் நினைத்தகாரிய முண்
5 - பூராடம் வியாபாரம்பண்ண உத்தமம்.
6 - உத்திராடம் உத்தியோகசந் தோஷமுண்டாம்.
7 - திருவோணம் ஸ்திரீகாரியம் கைகூடும். (கைகூடும்.
8 - அவிட்டம் - பெண்கேழ்க்க
9-சதயம்பயணம்போகசுகம்.
10-பூரட்டாதி - சாப்பிட்டால் செரிக்காது.
11- உத்திரட்டாதி சரீரத்துக்கு அவுழ்தம்செய்தால் ரோகம்.
12 - ரேவதி-சத்துருசெயம் பண் ணுவான்.
13-அசுபதி-மாடுவாங்கநலம்.
14-பரணி-பட்டங்கட்டநல்லது
15-கார்த்திகை கிரகபிரவேசம் ஆகாது
16-ரோகணி-கிணர்கட்டமனை குடிபோகநல்லது.
17-மிருகசிரிடம் - பயணமானுல் கள்ளர்பயமாகும்
18-திருவாதிரை - இராஜனைக் காண நல்லது.
19-புனர்பூசம் - தேவ்பிரதிஷ்டி பண்ணநல்லது.
20-பூசம் வஸ்திரங்கட்ட ஆகா
21-ஆயிலியம் வழக்காட தனம் வரும்.
22 மகம்- யுத்தயம் பண்ணி னுல் ஆபத்து வரும்.
23-பூரம் சினேகிதசெய்யநன்று
24 உத்திரம்-உயுத்தம் செய்ய செயம் (ல்லது:
25 அஸ்தம் - சினேகிதம்செய்யந
26-சித்திரை - எல்லா காரியமும் நல்லது (ளையுண்டு
27- சுவாதி ஸ்ரீசங்கமானுல் பிள்
28 - சோர்பைஎல்லா காரியமும் நல்லது க்கும்.
29-மபிதிரை சுபகாரியம்விாத்தி
30-சந்திரிகை மரங்கள் வைக்க நல்லது.

இப்படி - ஏழுவாரத்திற்கும் - நாழிகைபலன் அறியவும்.

## திங்ககிழமை 30 நாழிகைபலன்.

1-விசாகம்-எல்லா கர்ரியமும் நல்லது. (லது
2-அனுஷம் பயணம்போக நல்
3-கேட்டை-தனக்கு விர்த்திதேடி னுல் நல்லது-
4-மூலம்-தானியம் சங்கற்பம்பண் ணினுல் நல்லது
5-பூராடம்-திரேகத்துக்கு பரிகா ரமும் தீர்த்தமாடநன்று.
6-உத்திராடம் -யாதொரு காரி யத்துக்கும் நல்லது.
7-திருவோணம் - உக்கிரமான காரியம்பண்ண நல்லது
8 அவிட்டம் - பசுவினுலும்வெ ள்ளாமையாலும் பலனுண்டு
9 சதய தனக்குராச்சியலாபம்
10-பூரட்டாதி - போசனம்பண் ணநல்லது.

11 - உத்திரட்டாதியில் திரீசங்கம் பண்ணினால் புத்திரனுண்டாம். (நல்லது.
12 - ரேவதி சுபகாரியம் பண்ண
13 - அசுபதி - வைத்தியம்செய்ய போகவேண்டாம்.
14 பரணி காரியம் கூடிவரும்
15 கார்த்திகை. செயமானகாரியம் நல்லது.
16-ரோகணி வியாதி பரிகாரம் பண்ண நல்லது.
17- மிருகசிரிடம் எந்த காரியத்துக்கும் நல்லது.
18 திருவாதிரை எல்லா காரியமும் செயம்.
19 புனர்பூசம் கிரக பிரவேசம் நல்லது.
20-பூசம் விஷமிட்டாலமுர்தம்
21 ஆயிலியம் கலியாணம் பண்ணலாகாது.
22 மகம் ஒருகாரியமுமாகாது
23 பூரம் யாதொருகாரியமாகா
24 உத்திரம் ஒருவருடனே சண்டையாகாது
25 அஸ்தம் வீடுகட்டிகுடிபோகவும் யாத்திரையும்நல்லது
26 சித்திரைசகலகாரியம்சித்தி
27 சுவாதி மரமேறினால் விழுந்துமரணமாவான்.
28 சோர்பை தெய்வ தரிசனம் ராசாவையும் காணநல்லது.
29 மயிதிரை ஒருவருடனே பகைகாசெயம்வரும்.
30 சந்திரிகை நன்மையானகாரியம் நல்லது.

## செவ்வாய்க்கிழமை 30 நாழிகைபலன்.

1 விசாகம் எல்லா காரியமும் நன்று. (யம்
2 அனுஷம் போனகாரியம் ஜெ
3 கேட்டை தண்ணீருளபதார்த்தம் வாங்கநன்று
4 மூலம் ஆனைபிடிக்க காரியம் பார்கக நலம்.
5 பூராடம் விசஷே ஆதாயம்
6 உத்திராடம் வெத்தியும்விர்த்தியுண்டாம்.
7 திருவோணம் தொடுத்தகாரியம் பலிக்கு.
8 அவிட்டம் நாலுகால் சிவன் கொள்ளநாசமாம்.
9 சதயம்யாத் திரைபோகநன்று
10 பூரட்டாதி போர்செய்தால் தனக்கு ஜெயம்.
11 உத்திரட்டாதி கலியாணம் பண்ண நல்லது.
12 றேபதி செட்டுபெலியாது தானியம் கொண்டுவந்தால் நாசம்.
13 அசுபதி யாத்திரைக்கு தீது
14 பரணி யாத்திரை போனால் சோரபயமுண்டு.
15 கார்த்திகை வீடு கட்டினால் அக்கினிவாதைமரணம்.
16 ரோகணி யாத்திரை போகலாகாது பிணியுண்டாம்.
17 மிருகசிரிடம் வருணஜெபம் செய்தால் மழைவரும்.
18 திருவாதிரை தவமிருந்தால் பிள்ளையுண்டாகாது.

19-புனர்பூசம் எந்தகாரியஞ்செய்தாலும் நன்ருகாது.

20-பூசம் நல்ல வார்த்தையை கேழ்க்கவேண்டும்.

21 ஆயிலியம் உத்தியோகத்துக்கு எத்தினம் பண்ணிஞல் தீராது.

22-மகம் விஷதரனம் பண்ணாநல்லது.

23 - பூரம் ராஜனைக்காணமெத்த நல்லது.

24 - உத்திரம் வித்தை ஆரம்பித்தால் நல்லது.

25-அஸ்தம் அவுழ்தங் கொடுக்க கவியாதி தீரும்.

26 - சித்திரை சிநேகித்தால் எப்போதும் பிரியார்.

27 - சுவாதி தெய்வ பிரதிஷ்டை செய்ய நல்லது

28-சோர்பை ஒருகாரியமும் நினைக்கவும் தொடுக்கவும் வேண்டாம்

29-மயிதிரை ஒருகாரியும் எத்தினம் பண்ணிஞல் மனவருத்தம் வரும்

30-சந்திரிகை ஸ்திரீ சங்கத்துக்கு ஒருவரை சந்திக்கநன்று.

## புதன்கிழமை 30 நாழிகைக்குப்பலன்.

1-விசாகம் பொல்லாப்பும் கெட்ட வார்த்தையும் வரும்

2-அனுஷம் நல்லகாரியம் நினைத்து ஒருவர் கிட்டப்போக சமயமிருது

3 கேட்டை நினைத்தது முடியும்

4-மூலம் சித்திரவேலை செய்யநல்லது

5-பூராடப் யாதொரு காரியமுமாகாது

6-உத்திராடம் யாதாமொருகாரியமுமாகாது

7-திருவோணம் பெண்சாதிவர நல்லது

8-அவிட்டம் நேவுவர்தால் சஞ்சலம் வந்துதீரும

9 சதயம் ஒருகாரியம் பலிக்கும் நினைத்தால் தனியேவந்து கூடும்

10-பூரட்டாதி சண்டைசெய்தால் சத்துருமுரிவான்

11-உத்திரட்டாதி ஆதாயத்துக்கு உத்தேசித்தால் தீராதவியாதிவரும்

12-ரேபதி பெரியோர் கையில் தானம் பண்ணிஞல் பலனுண்டு

13- அசுபதி தொடுத்த காரியங் கைகூடும்

14-பரணி நினைத்தது முடியும்

15-கார்த்திகை நல்லகாரியம் பண்ணிஞல் நல்லது

16-ரோகணி சயனித்துக்கொண்டால்ஸ்திரீகளுக்கு பிரிதியுண்டாம்

17 மிருகசிரிடம் ஒருகாரியமெத்தினஞ்செய்தால் ஆகாயம்

18-திருவாகிரை சுபகர மானது கோறிஞல் கைகூடும்

19 புனர்பூசம் தொடுத்த வழக்கு செல்லும்

20-பூசம் பிரையாணம் போனல் கிடையாத காரியம் கிடைக்கும்

21-ஆயிலியம் யாதொன்றுமாகாது

22மகம் புத்திரஉற்பத்தி செய்ய நன்று (லனுண்டு

23 பூரம் இராஜனைக் கண்டால்

24-உத்திரம நல்லவார்த்தைபேசி சினேகஞ்செய்ய நன்று

25 அஸ்தமவழக்குபேச துணையுண்டு

26 சித்திரை எந்தகாரியம் நினைத்தாலும் நன்று

27-சுவாதி வட்டிக்கி வாங்கி செட்டுபண்ண பலனுண்டு

28-சோர்பை சினேகிதாளுக்கு சந்தோஷமுண்டு (காது

29 மபிதிரை நினைத்த காரியமா

30-சந்திரிகைஆனை குதிரைகொண்டால் நாசம்

## வியாழக்கிழமை 30- நாழிகைபலன்.

1 விசாகம் வட்டிக்கு கொடுத்தால் லாபமுண்டு

2-அனுஷம் உத்தியோகம் தானே வரும் கேட்டவுடமையும் வரும்

3-கேட்டை அசனம் பண்ணினால்வாறந்தி சரீரங்குலைவுவரும்

4 மூலம் சுகந்தாதிவரும்

5-பூராடம் வித்தை யாரம்பிக்க நல்லது

6-உத்திராடம் யாதொரு காரியமுமாகாது

7 திருவோணம் உத்தி யோகத்தாலும் யாதொரு காரியமுங் கைகூடும்

8-அவிட்டம் உத்தியோகத்துக்கு போக சத்துரு ஓடிப்பொவான்

9-சதயம் ஸ்திரீகளுடனே பேசினால் உரவுநீங்காது

10 பூரட்டாதி மாடு கொண்டால் நலம்

11 உத்திரட்டாதி நெல்லுகொண்டுவிற்க லாபமுண்டு

12ரேவதியாத்திரைபோகநல்லது

13 அசுபதி விவாகம் செய்யநல்லது

14- பரணி அவிழ்தங்கொள்ளநல்லது (ய்யநல்லது

15 கார்த்திகை வியாபாரஞ் செ

16-ரோகணி யாத்திரை போகலாகாது

17-மிருகசீரிடம் யாதொருகாரியமும் செய்யலாகாது

18 திருவாதிரை வழக்குபேசினால்தீராது

19 புனர்பூசம் யாதொரு காரியமுஞ்செய்யலாகாது

20-பூரம் யாத்திரைபோனல்வழியில் மரணம் முடியும்

21 ஆயிலியம் தொடுத்த காரிய

22 மகம் செபம்பண்ணநன்று

23-பூரம் எந்தகாரியமுமாகாது

24 உத்திரம் யாதொரு காரியம் பண்ணநல்லது

25 அஸ்தம் ஒருவருடனேசிநேகஞ்செய்யலாகாது

26 சித்திரை யாதொரு காரியத்துக்குமாகாது

27-சுவாதி எந்தகாரியமு நன்று

28-சோர்பை யாத்திரை போனல் மரணம்

29-மயிதிரை போனால் பொல்லாப்புவரும்
30-சந்திரிகை எடுத்தகாரியம்முடியும்

## வெள்ளிக்கிழமை 30 நாழிகைப்பலன்.

1-விசாகம் பெண்காரியமும் ராஜகாரியமும் பேசிடில்தீது
2-அனுஷம் எதஷ்டமானபோசனங்கொள்ளாநல்லது
3-கேட்டை யோசித்தகாரியமெல்லாஞ்செயம்
4-மூலம் ஒருவருடனே சினேகிதன்வருவான்
5-பூராடம் வருணசெபம் பண்ணவருஷியாது
6-உத்திராடம் சகல வேளாண்மைக்கும் விரை விரைத்தால் விளையும் (தால்மரணம்
7-திருவோணம் வியாதிபிடித்
8-அவிட்டம் உத்தி யோகத்துக்குபோக சத்துரு ஓடிபோவான் மாகாது
9 சதயம் யாதொரு காரியமு
10-பூரட்டாதி பெண் பேசநலம்
11 - உத்திரட்டாதி - கலகம் நினைக்கதீரும்
12-ரேபதி சத்துருவோடு சண்டைபண்ணினுல் சமாதானமாவான் (நல்லது
13 அசுபதி வித்தை ஆரம்பிக்க
14-பரணி வைத்தியஞ் செய்தால் சற்றேபலிதமாகும்
15-கார்த்திகை வியாதியில்விழுந்தால் மரணம்
16-ரோகணி படையெடுத்து உத்தஞ்செய்தால்ஜெயம் வரும்
17 மிருகசிரிடம் யாதொரு காரியயமுமாகாது (மீவைக்கநலம்
18-திருவாதிரை அன்ன சத்திர
19 - புனர்பூசம் போசனம்பண்ணலாகாது
20-பூசம் - ராஜாவைக் காணநலம்
21-ஆயிலியம் உத்தியோககாரியம் செய்தால் ஜெயமாம்
22 மகம் ஸ்திரீசங்கம் பண்ணினுல் என்றைக்கும் பிரியாது
23 பூரம் உத்தியோக காரியத்தால்சுகம் (சந்தோஷமாம்
24 உத்திரம் ஏதொரு காரியமு
25-அஸ்தத் எல்லா காரியமும்
26 - சித்திரை வியாபாரஞ்செய்தால் லாபமுண்டு
27-சுவாதி பகையானுல் பொல்லாப்புவரும்
28-சோர்பை-நல்லகாரியம் பண்ணபொல்லாப்புவரும்
29-மயிதிரை ஒருவருடன் சிநேகிக்கநல்லது (மாகாது
30 - சந்திரிகை தொடுத்த காரிய

## சனிக்கிழமை 30 நாழிகையின்பலன்.

1-விசாகம் கலகம்பேசநன்று
2-அனுஷம்ராஜாவைக்காணநல்லது
3-கேட்டை சண்டை பண்ணவும் உத்தியோகத்துக்கும்போகவும் நன்று

4 மூலம் ஒருவருடன் சினேகஞ் செய்யநலம்
5-பூராடம் கலியாணம் பண்ண நல்லது
6 உத்திராடங் குதிரைகொண்டு விற்க ஆதாயம்வரும்
7-திரு வோணம் பயணத்துக்கு ஆகாது (சநல்லது
8-அவிட்டம் ஒருவருடன் பேச
9 சதயம் ஒருவருடன் தொடுத் தவழககு பலிக்கும (நலம்
19- பூரட்டாதி சகல சாந்திக்கும்
11 உத்திரட்டாதி ஸ்திரீ சங்கத் துக்கு நல்லது
12 ரேவதி எடுத்தகாரியம் ஸயம்
13-அசுபதி தொடுத்த காரியம் கைகூடும் (யுண்டு
14 பரணி வழக்குபேச நன்மை
15-கார்த்திகை வீடு கட்டலா காது
16 ரோகணி சரக்குகொண்டுவிற் க நல்லது
17 மிருகசிரிடம் தூரவழி போகந ல்லது உச்சிதமான காரிய
18 திருவா வீடுகட்டலாகாது
19 புனர்பூசம் தெய்வ பிரதிஷ் டைக்கிநல்லது (லாபம்
20 பூசம் தானியமகம் கொடுக்க
21-ஆயிலியம் ஸ்திரீ சங்கத்துக்கு நல்லது
22-மகம் எந்தகாரியமுமாகாது
23-பூரம் எந்தகாரியமு மாகாது
24-உத்திரம் குடிபோகநன்று
25-அஸ்தம் அவிழ்தம் கொண்டா ல் நல்லது
26-சித்தி எந்தகாரியமுமாகாது
27-சுவா எந்தகாரிய முமாகாது
28-சோர் வீரதத்துவத்துக்குஆ காது
29-மயித் சினேகிதமான பேருக்கு விரோதம்வந்தாலாகாது
30-சந்திரிகுளம் கிணர் வெட்ட நல்லது

---

| | | | |
|---|---|---|---|
| வி வி சனி வி. | செ பு க ச | சனி வி செ | செ பு சனி சு |
| சு ச குரு பு | லமபாகம். | | ச பு ச னி சு |
| வி ச னி குரு சனி | | | குரு சனி சு செ |
| செ பு குரு வி | செ சனி குரு வி | சு ச செ பு | வி சனி குரு செ |

## சூரியன் பாதம் 8-க்கு விபரம்.

1.பாதம் மிதுனம் 2 சிம்மம், 3-கன்னி, 4-விருச்சிகம், 5- தனுசு, 6- மகரம், 7- கும்பம், 8- மீனம்.

சந்திரனுக்குபாதம் 5-க்கு விபரம்

1 பாதம் மேஷம், 2 மிதுனம், 3 கடகம், 4 துலாம் 5-க்கு

செவ்வாய் பாதம் 8 க்கு விபரம்.

1-பாதம் மேஷம், 2 ரிஷபம் 3-மிதுனம், 4 சிம்மம், 5-1 கன்னி, 6-துலாம், 7 விருச்சிகம், 8 தனுசு.

புதன் பாதம் 5-க்கு விபரம்.

1 பாதம் மேஷம், 2 கடகம், 3 துலாம், 4 தனுசு, 5 கும்பம்.

வியாழன்பாதம் 7-க்கு விபரம்.

1 பாதம் ரிஷபம், கூ கன்னி, 3-விருச்சிகம், 4 தனுசு, 5 மகரம் 6-7 மீனம்.

சுக்கிரன்பாதம் 6 க்கு விபரம்.

1 பாதம் மேஷம், 2 - ரிஷபம் 3 கடகம், 4 சிம்மம்,5-துலாம் 6 கும்பம்.

சனிபாதம் 6-க்கு விபரம்.

1 பாதம் ரிஷபம், 2 மிதுனம் 3 கடகம் 4 சிம்மம்5கன்னி 6 விருச்சிகம், 7 8 மகரம், 9 மீனம்

ஆருடங்கேட்ட நாழிகைக்கு எந்த லக்கினமாகிறதோ அந்தலக்கினத்துக்குள்ள நாழிகையை 4 பாகம் செய்துக் கொள்ளவேண்டியது.

சூரியன் மிதுனம் 4 தாது இரண்டு பாதமுள்ள ஜீவன் ராஜாகொஞ்சம் வெள்ளைநிறமுள்ளது புருஷன் வெங்கலம் உருண்டைவடிவம் எண்ணிக்கை 30 உரைப்புமுள்மரம்.

இரண்டாம்பாதம்மூலம் நாலுகால் ஜீவன்வைசியசாதி வெளுப்பு இரட்டை ஸ்ரீ ஈயம் நாற்கோணம் எண்ணிக்கை 28 நீலஅல்லிக் கொடி.

மூன்றாம்பாதம் கன்னி சீவன் 6 கால்வண்டு பறவையுள்ளதுசூத்திரன் சிகப்புவர்ணம் ஒத்தைபுருஷன் தாம்பிரம்முக்கோணம் எண்ணிக்கை 8 முள்மரங்கள்.

நான்காம்பாதம் விருச்சிகம் இறந்தவஸ்து அனேக காலுள்ளவூர்வன பிராமணன் மஞ்சள் வர்ணம் இரட்டைஸ்ரீ உருக்குவில் வடிவம் எண்ணிக்கை 6 பிரண்டை.

ஐந்தாம் பாதம் தனுசுதாது இருகால்ஜெந்து ராஜாஅதிகவெளுப்பு ஒருபுருஷன் நீண்டவடிவம் எண்ணிக்கை 9.

ஆறுவதுபாதம் மகரம் மூலம் நாற்கால்ஜெந்து வைசியஜாதி வெளுப்பு இரண்டுஸ்ரீ வெள்ளி நாற்கோண எண்ணிக்கை வபெருங்கொடிகள்,

ஏழாம்பாதம் கும்பம் ஜீவன் அருகால் ஜீவன் சூத்திரன்கொஞ்சம் வெளுப்பு ஒரு புருஷன் தீட்சண பாஷாணம் ஐங்கோணம் 3 வெகு கொடிகள்

எட்டாம்பாதம் மீனம் இறந்தவஸ்து பலகால்செந்து பிராமணன் மஞ்சள்வர்ணம் இரட்டைஸ்ரீ வெங்கலம் வில்வடிவம்வளைந்தமுள்மரம்,

சந்திரன் முதல்பாதம் மேஷம் மூலம் அருகால்சிவன் ராக்ஷதாளைப்போலொத்த க்ஷத்திரியன் வெள்ளை இரட்டைஸ்ரீ ஈயம் நாற்கோணம் 28 நீல அல்லிக்கொடி

இரண்டாவது பாதம் மிதுனம் ஜீவன் பலகால் ஜெந்து ராட்சத வைசியன் சிகப்புசிறம் ஒருபுருஷன் தாம்பிரம் முக்கோணம் 8 முள்ளுடையமரம்,

மூன்றும்கடகம் ஜீவன் பலகால்ஜெந்து வைசியன் அதிவெள்ளை ஒத்தைப்புருஷன் இரும்புதங்கம் நீண்டவடிவம்9டவழமல்லிகை,

நான்காம்பாதம் துலாம் இறந்தவஸ்து இருகால்ஜீவன் சூத்திரன் கருப்புவர்ணம் இரண்டுஸ்ரீ வெள்ளி நாற்கோணம் 7 பிரபலமான கொடிகள்

ஐந்தாம்பாதம் கும்பம் தாதுகொடிகள் சூழ்ந்தவீடு நாற்கால் செந்து பிராமணன் அதிககருப்பு ஒத்தைபுருஷன் தீட்சணபாஷாணம் ஐங்கோணம் 3 செவ்வாய்,

ஆறும்பாதம் மூலம் அருகால்ஜெந்து க்ஷத்திரியன் கொஞ்சம் வெளுப்பு இரட்டைஸ்ரீ வெங்கலம் வில்வடிவம் 2 வளைந்த முள் மரம்

ஏழாம்பாதம் ஜீவன் பலகால்வைசியன்வெள்ளை ஒத்தைபுருஷன் ஈயம்முரம்போலொற்றவடிவம் 30 முள்ளுகொடிகள்,

எட்டாம்பாதம் இரந்தவஸ்து இருகால்சிவன் சூத்திரன்சிகப்புவர்ணம்இரட்டைஸ்ரீ உருண்டைவடிவம் 28 நீலக்கொடி,

புதன் முதல்பாதம் ஜீவன் அருகால் வைசியன் மஞ்சள் வர்ணம் இரட்டைஸ்ரீ வில்வடிவம் 6 புஷ்பக் கொத்துக்களுடையகொடி,

இரண்டாம்பாதம் இறந்தவஸ்து பலகால் சூத்திரன் அதிகவெள்ளை ஒத்தைபுருஷன் இரும்பு தங்கம் நீண்டவடிவம் 9 பச்சிலைமரம்,

மூன்றாம்பாதம் தாது இருகால் பிராமணன் கருப்பு இரட்டைஸ்ரீ வெள்ளி நாற்கோணம் எ-பிரபலமானகொடிகள்

நான்காம்பாதம் மூலம் நாற்கால்சீவன் க்ஷத்திரியன் அதிககருப்பு ஒருபுருஷன் தீட்சணபாஷாணம் ஐங்கோணம் 3 கொடிகளால் சூழ்ந்தயிடம்.

ஐந்தாம்பாதம் சீவன் அருகால் வைசியன் கொஞ்சம் வெளுப்பு இரண்டுஸ்ரீ வெங்கலம் வில்வடிவம் கணக்கு 2 - ஈரமில்லாத முள்மரம்.

வியாழன் முதற்பாதம் ரிஷபம் சீவன் பலகால் வைசிய பிராமணன் அதிகவெள்ளை ஒற்றைபுருஷன் இரும்பு தங்கம் நீண்டவஸ்து எண்ணிக்கை 6 -சிஞ்சபிதரு.

இரண்டாம்பாதம் கன்னி இறந்தவஸ்து இருகால் வைசிய க்ஷத்திரியன் கருப்பு இரட்டைஸ்ரீ வெள்ளி நாற்கோணம் எண்ணிக்கை 7-பிரபலமானகொடி.

மூன்றாம்பாதம் விருச்சிகம் தாது நாற்கால் வைசிய வைசியன் அதிககருப்பு ஒருபுருஷன் தீட்சண்ணிய பாஷாணம் ஐங்கோணம் 3-கொடி படர்ந்தவீடு.

நான்காம்பாதம் தனுசு மூலம் அருகால் வைசியன் சூத்திரன் கொஞ்சம் வெளுப்பு இரண்டுஸ்ரீ வெங்கலம் வில்வடிவம் எண்ணிக்கை - 2முள்ளுள்ளகொடிகள்.

ஐந்தாம்பாதம் மகரம் சீவன் பலகால் வைசியப் பிராமணன் வெளுப்பு ஒற்றைபுருஷன் ஈயம் முறவடிவம் 30 முள்ளுமரம்

ஆறாம்பாதம் மீனம் இறந்தவஸ்து இருகால்வைசிய க்ஷத்திரியன் சிகப்புவர்ணம் இரண்டுஸ்ரீ தாம்பிரம் உருண்டைவடிவு 28 நீல அல்லிக்கொடி

ஏழாவது மீனம் தாது நாற்கால் வைசியவைசியன் மஞ்சள்வர்ணம் ஒருபுருஷன் இரும்பு நாற்கோணம் 8 முள்ளுமரங்கள்

சுக்கிரன் முதல்பாதம் மூலம் பலகால் சூத்திரன் கருப்பு இரண்டுஸ்ரீ வெள்ளி நாற்கோணம் 7 பிரபலமானகொடிகள்

இரண்டாம்பாதம் சீவன் இருகால்விப்பிரன் அதிககருப்பு ஒருபுருஷன் தீட்சணபாஷாணம் ஐங்கோணம் 3 கொடிகளால் படர்ந்தவீடு

மூன்றாம்பாதம் இறந்தவஸ்து நாற்கால் க்ஷத்திரியன் கொஞ்சம்வெளுப்பு இரண்டுஸ்ரீ வெங்கலம் வில்வடிவம் 2 நீரில்லா முள்ளுமரம்

நான்காம்பாதம் தாது அருகால் வைசியன் வெளுப்புஒற்றைபுரு ஷன் ஈயம் முரம்வடிவம் 30 வளைந்தமுள்ளுமரம்

ஐந்தாம்பாதம் மூலம்பலகால் சூத்திரன் சிகப்புவர்னம் இரண்டு ஸ்ரீ தாம்பிரம் உருண்டைவடிவம் 28 நீல அல்லிக்கொடி

ஆரும்பாதம் சீவன் இருகால் பிராமணன் மஞ்சள்வர்ணம் ஒத் தைப்புருஷன் உருக்கு நாற்கோணம் 8 முள்ளுமரங்கள்

சனி முதல்பாதம் தாது இருகால் சண்டாள பிராமணன் அதிக கருப்பு ஒத்தைபுருஷன் தீட்சணபாஷாணம் ஐங்கோணம் 3கொடி வீடு

இரண்டாம்பாதம் மூலம் நாற்கால் சண்டாள க்ஷத்திரியன் கொஞ்சம்வெளுப்பு இரண்டு ஸ்ரீ வெங்கலம் தனுசுவடிவம் 2 நீரில்லா முள்மரம்

மூன்றும்பாதம் சிவன் அருகால் சண்டாளவைசியன் வெளுப்பு ஒத்தைப்புருஷன் ஈயம் முரவடிவம் 30 வளைந்தமுள்ளுமரம்

நான்காம்பாதம் இறந்தவஸ்து பலகால் சண்டாள சூத்திரன் சிக ப்புவர்ணம் இரட்டைஸ்ரீ தாம்பிரம் உருண்டைவடிவம் 28 நீலஅ ல்லிக்கொடி

ஐந்தாம்பாதம் தாது இருகால் சண்டாளபிராமணன் மஞ்சள்வடி வம் ஒத்தை புருஷன் உருக்குநாற்கோணம் 8 முள்ளுமரங்கள்

ஆருவதுபாதம் மூலம் நாற்கால் சண்டாளக்ஷத்திரியன் அதிகவெ ள்ளை இரட்டைஸ்ரீ இரும்பு தங்கம் முக்கோணம் பூங்கொத்தாகிய கொடி

ஏழாவதுபாதம் சீவன் அருகால் சண்டாளவைசியன் கருப்பு ஒத்தைபுருஷன் வெள்ளி வில்வடிவம் 9 சிஞ்சாதரு

எட்டாவதுபாதம் தாது இறந்தவஸ்து பலகால் சண்டாளசூத்தி ரன் அதிககருப்பு இரட்டைஸ்ரீ தீட்சணபாஷாணம் நீண்டவடிவம் 7 பிரபலமானகொடி

ஒன்பதாம்பாதம் தாது இருகால் சண்டாளபிராமணன் கொஞ் சம் வெளுப்பு ஒத்தைபுருஷன் வெண்கலம் நாற்கோணம் 3 பூநார்கள்

முற்றிற்று.

## பாஷாணவர்க்கம்.

கும்பத்தில் மூன்றும்பாதம் சூரியன்வந்தால் கல் துலாத்தில் 2-பாதம் சந்திரன் வந்தால் உவர்மண் செ - துலாம் 3 - வது பாதம் 6-வது - சுத்து வைப்புக்களம் தனுசு புதன் 2 - ம் பாதம் 4 வது சுத்து புழுதின்மண் விருச்சிகம் 4 ம் பாதம் 3 வது குருவந்தால் பொன் மணல் சுக்கிரன் விருஷபம் 4 பாதம் 2 - வது சுத்து பளிங்குவைப்பு முத்து சனி மகரத்தில் 4 ம் பாதம் 8 வது சுத்து இரும்பு.

## பணிவர்க்கம்.

சூரியன் தனுசில் 3 ம் பாதம்வந்தால் மாணிக்கம்
சந்திரனுக்கு துலாம் 2 ம் பாதம் வந்தால் முத்து
செவ்வாய் மிதுனம் முதல்பாதம் வந்தால் பவழம்
புதன்கடகம் 2 ம் பாதம்வந்தால் மரகதபச்சை
குரு ரிஷபம் 2 ம் பாதத்தில்வந்தால் புஷ்பராகம்
சுக்கிரன் சிம்மம் 3 ம் பாதத்தில்வந்தால் வைடூரியம்
சனி விருச்சிகம் 2 ம் பாதத்தில் வந்தால் நீலம்.

## கருவிவர்க்கம்.

சூரியன் மிதுனம் 4-ம் பாதத்தில்வந்தால் ஒருவாய்க்கருவி
சந்திரன் மிதுனம் -3ம் பாதத்தில்வந்தால் துளைக்கருவி
செவ்வாய்விருச்சிகம்முதல்பாதத்தில்வந்தால்வெங்கலக்கருவி
புதன் கும்பம் 4 - வது பாதத்தில்வந்தால் நரம்புபூட்டியகருவி
வியாழம் மிதுனம் 4 வது பாதத்தில் வந்தால் தங்கத்தினுலும் வெள்ளியினுலும் பிடிபோட்ட ஆயுதங்கள்
சுக்கிரன் துலாம் 1-ம் பாதம்வந்தால் மரத்தால்செய்த ஆயுதங்கள்
சனி சிம்மம் 2-ம் பாதத்தில்வந்தால் தோல்கருவி.

## தாதுமூலசீவனம்.

சூரியன் மிதுனம் 4 ம் பாதத்தில்வந்தால் சிவதாது
நகம் மயிர் எலும்பு பல்லு தோல்
சூரியன் சிம்மத்தில் முதல்பாதம் வந்தால் மூலதாது
தோல் பட்டை கிழங்கு விரைகள்
சூரியன் கன்னியில் 3-ம்பாதத்தில்வந்தால் சிவதாது
சூரியன்விருச்சிகம் 3-ம் பாதத்தில்வந்தால் மூலதாது
சூரியன் தனுசு 3 ம்பாதத்தில் வந்தால் சீவதாது
சூரியன் மகரத்தில் 3-ம் பாதத்தில் வந்தால் தாதுவில்தாது
சூரியன் கும்பத்தில் 3- ம்பாதம் வந்தால் மூலத்தில் மூலதாது
சூரியன் மீனத்தில் 3 ம் பாதத்தில் வந்தால் சீவனில்சீவன்

## சந்திரன்.

மேஷம் 4 ம் பாதத்தில்வந்தால் மூலதாது
மிதுனம் 3 ம் பாதத்தில்வந்தால் மூலசிவன்
கடகத்தில் முதல்பாதம் வந்தால் இறந்ததாது
துலாம் 2-ம் பாதத்தில்வந்தால் தாதுவில்தாது
கும்பத்தில் 2-ம் பாதம்வந்தால் மூலதாது.

## செவ்வாய்.

மேஷம் முதல்பாதத்தில் வந்தால் தாதுவில்தாது
ரிஷபம் 3 ம் பாதத்தில்வந்தால் மூலத்தில்தாது
மிதுனம் 1-ம்பாதம்வந்தால் சீவதாது
சிம்மம் 4-ம் பாதத்தில்வந்தால் மூலதாது
கன்னி 4 ம்பாதத்தில்வந்தால் சீவதாது
துலாம் 3 ம் பாதத்தில்வந்தால் தாதுவில்தாது
விருச்சிகம் 1-ம் பாதத்தில்வந்தால் மூலதாது
தனுசு 1-ம் பாதத்தில்வந்தால் சீவதாது.

## புதன்.

மேஷம் 2-ம் பாதத்தில்வந்தால் சீவதாது
கடகம் 2-ம் பாதத்தில்வந்தால் சீவதாதுவிலமிர்தவஸ்து
துலாம் 4 ம் பாதத்தில்வந்தால் தாது
தனுசு 2 ம் பாதத்தில்வந்தால் சீவனில்ஜீவன்
கும்பம் 4 ம் பாதத்தில் மூலஜீவன்.

## வியாழன்.

ரிஷபம் 2 ம் பாதத்தில்வந்தால் சீவமூலம்
கன்னியில் முதல்பாதத்தில் வந்தால் சீவனில்சீவன்
விருச்சிகம் 4 ம் பாதத்தில்வந்தால் மூலஜீவன்
தனுசு 4 ம்பாதத்தில்வந்தால் ஜீவதாது
மகரம் முதல்பாதத்தில்வந்தால் ஜீவதாது
மீனம் முதல்பாதத்தில்வந்தால் ஜீவமூலம்
மேற்படிமூலம் 4 ம் பாதத்தில்வந்தால்ஜீவனில்தாது.

## சுக்கிரன்.

ரிஷபம் 4-ம் பாதத்தில்வந்தால் மூலத்தில்மூலம்
கடகம் 4 ம் பாதத்தில்வந்தால் மூலதாது

சிம்மம் 3ம் பாதத்தில்வந்தால் மூலஜீவன்
துலாம் முதல்பாதத்தில்வந்தால் மூலதாது
கும்பம் முதல்பாதத்தில்வந்தால் மிர்தமூலம்.

சனி.

ரிஷபம் முதல்பாதத்தில்வந்தால் மூலதாது
மிதுனம் 2 ம் பாதத்தில்வந்தால் ஜீவதாது
கடகம் 3 ம்பாதத்தில்வந்தால் மூலதாது
சிம்மம் 2-ம் பாதத்தில்வந்தால் மூலஜிவன்
கன்னி 2-ம் பாதத்தில்வந்தால் மூலஜீவன்
விருச்சிகம் 2-ம் பாதத்தில்வந்தால் மூலத்தில்மூலம்
மகரம் 4- பாதத்தில்வந்தால் மூலதாது மரங்களிருந்து
மகரம் 2-ம் பாதத்தில்வந்தால் மூலதாது கொடிகளிலிருந்து
மீனம் 2 பாதத்தில்வந்தால் மூலஜிவன்.

முற்றிற்று.

தாதுவாவது மண் கல் பொன் முதலியனவாம்
மூலமாவது புல் கொடி செடி முதலியனவாம்
ஜிவனாவது எரும்புமுதலியபறவைகள் விலங்குகள் முதலியனவாம்.
மூலதாது புல் கொடி செடி முதலிய மடிந்து போனவைகளும்மடியாதவிடத்து அவற்றின் பட்டை கிழங்கு பூ முதலியனவாம்.
ஜிவதாது எரும்புமுதலிய பறவைகள் விலங்குகள்முதலிய மடிந்துபோனவையும் மடியாதவிடத்து அவற்றின் தோல் நரம்பு மாமிசம்முதலியனவாம்.

தாதுமூலம் முற்கூறிய மூலதாதுவாயும் ஜீவதாதுவாயும் ஆகியவஸ்துக்களினால் பண்ணினதும் எழுதினவுமான புல் செடி கொடி முதலிய மூலங்களாம்.

ஜிவமூலமாவது மடியாதுள்ள புல் கொடி செடி முதலிய மூலங்களாம் இதில் ஜிவமூலத்துக்குக்காட்டியவற்றை மூலஜிவனுக்கும்

லஜிவனுக்குக்காட்டியவற்றை ஜிவமூலத்திற்குமாம்
தாதுஜிவன்முற்கூறிய மூலதாதுவும் ஜிவதாதும்ஆகிய வஸ்துக்களினாலேபண்ணியதும் எழுதியதுவுமான எரும்பு முதல்பறவைகள் விலங்குகள் முதலியஜிவன்கள்.

மூலஜிவனாவது முற்கூறிய மூலதாதுவாகிய வஸ்துகளினாலே பண்ணினவும் எழுதினவுமான எரும்பு முதலியபறவைகள் விலங்குகள் முதலிய ஜிவன்களாம் இவைகளெல்லாம் அவற்றின் காண்டங்களினாலே உணரவும்.

மூலதாதுவாய் வந்தவிடத்தில்,

சூரியனுக்கு வைக்கோல், மதிக்கு புல், குஜனுக்கு தினை சாமைவ ரகு, புதனுக்கு இலை சிறுகொம்பு, குருவுக்கு கடலை நெல் வஸ்திரம், சுக்கிரனுக்கு மாவு சோறு கடுகு கொள்ளு, சனிக்கு மிளகு முள் எள் கரி, ராகுவுக்கு கொடி கயிறு இவைகள்ளாம்.

மூலமாய்வந்தால் சூரியன் ஊரைச்சார்ந்த மரமென்றும் நட்பாட்சியுச்சம் பெருமரம் காடுசேர்ந்த முள்மரம் தோலுள்ளமரம் வரைமேடு சேர்ந்தவை.

மதி உச்சத்தில் வாழைக்கிழங்கு வெண்நெல்லு வெள்ளெள்ளு கொள்ளு கடலை சிறுமுள்ளுடையதூரென்றும்.

புதனுக்கு பச்சைபயறு இலை சிறுதூரு புற்றிடங்களுமாம்.

குருவுக்கு கனி தேன் நெல் துவரை கல். சுக்கிரனுக்குமரம், கரும்பு விளைந்த நிலம் வெள்ளெள்ளு வெண்துவரை. சனிக்கு முள்மரம் சூரை கத்திரி உளுந்து வேர். ராகுவுக்கு பனை எள்ளுகொடி புற்று.

இந்தகிரகங்களுக்குள்ளபடி இராசிகளுக்கும் மேஷம் விருச்சிகம் பூ ரிஷபம் துலாம் காய் மிதுனம் கன்னி இலை கடகம் கிழங்கு சிம்மம் தோல் தனுசு மீனம் பழம் மகரகும்பம் வேர் இப்படிப்பலன் பார்த்துச்சொல்லவும்.

ஜிவதாதுவாய் வந்தவிடத்து சூரியன் தோல் நகம் முதலானவை மதி முத்து நத்தை முதலானவை குசன் வற்றாண் புதன் பீலி குரு குங்குமம் புனுகு கஸ்தூரி சுக்கிரன் வெண்சாமரம் சனி கருப்பு மயிர் இராகு எலும்பு கொம்பு இதுகருத்தினல் தெரிந்துகொள்ளவும் ஆரூடம் கேட்டபோது எந்தலக்கினம் 4-பாதத்தில் எந்த பாதமிருக்கிறதோ அந்த பாதத்தில் எந்த கிரகமிருக்கிறதோ அதைக்கொண்டு பலன்சொல்லவும்.

உலோகவர்க்கம்.

சூரியனுக்குப்பித்தளை, சந்திரனுக்கு வெண்கலம், செவ்வாய்க்கு செம்பு, புதனுக்குத்தரா, குருவுக்குப்பொன், சுக்கிரனுக்குவெள்ளி, சனி ராகு இவர்களுக்கு இரும்பு சூரியன் சந்திரன் இராகு இவர்கள் ஆக்ஷிராசியிலிருந்திடில் சூரியனுக்குப் பஞ்சலோகம்சந்திரனுக்கு ஈயம் ராகுக்கு நாகம்,

அகத்திசர் திருவாய்மலர்ந்தருளிய

# இராசிப்பாதப்பிரிவின்பலன்.

### மேஷம் முதற்பாதம்.

தாமேவுலக்கினத்திற்பாதந்தன்னைச் சாற்றுகிறேஞ்சுந்தரமே தய வாய்க்கேளு, பூமேவுமேஷலக்கினத்திலேதான் புகழ்ந்தமுதற்பாதமதி ற் பிறந்தபாலன், நாமேவுங்கவிழ்ந்துதான் பிறக்குமைந்தன் நடுவய தில் நயனத்தில்நோயுண்டாகும், ஆமெனவேயாண்டொன் றீராறில் தத்து வதுகடந்தா லறுபத்தியெட்டுதானே.

### மேஷமிரண்டாம்பாதம்.

எட்டானமேஷத்தி லிரண்டாம்பாத மேந்திழையாள் மலர்ந்து மேபிறக்கும்பிள்ளை, மட்டாகவொருவயது கழிக்கவேண்டும் வாழ்வு மிகவுண்டாம் பொன்னுண்டாகும், செட்டானவம்பியவள்ளாய் மூப் பாவாள் செல்வர்களைப்பெற்றிடுவா ளழிவுங்காணும் ஓட்டானமறு முகமோர்போதும்பாரா ளுத்தமியா மெல்லோர்க்கு மிரங்குவாளே.

### மேஷமூன்றாம்பாதம்.

இரங்குவாள் மேஷத்தில் மூன்றாம்பாத மின்பமுடனொருக்கணி த்தான்மகப்பிறக்கும் சுருக்கமுடன் பாக்கியங்கள் கெற்பங்காணுஞ் சுகமிலான்மூன்றெட்டுபனிரெண்டுமூவாறு, பெருக்கமாய்த்தத்துவருந் தப்பிவிட்டால் பிசகாது நாற்பத்துயெட்டிலேதான், பருக்கவே துடி யுண்டாங் கழிந்தகண்ணன் பல்லழகன் சொல்லழகன் பசியுள்ளானே.

### மேஷநான்காம்பாதம்.

உள்ளவேமேஷமதிநாலாம்பாத முதித்தவொரு பெண்ணுக்குங் கவிழ்ந்துவிழும் தள்ளாதிரண்டிலோராறுதன்னில் தப்பினாற்பதினெட் டில் முப்பத்தாறில் கள்ளமொழி யுள்ளவளாய்க் களவுசெய்வாள் கண் டாசைக்கொண்டிடுவாள் வம்பியாகும், விள்ளாதவடக்கமுள்ள ஒழுப்பு க்காரி மேதினியில் பாக்கியங்கள் விளங்குந்தானே.

### ரிஷபம் முதற்பாதம்.

தானென்றவிடபமுதற் பாதந்தன்னில் தான்பிறக்குமாண் பிள் ளைக்கவிழ்ந்துவிழும், ஊனமுண்டுபத்துபதி னெட்டிலேதான் உ

கந்துமது தப்பிவிட்டாலெஞ்செட்டாகும், ஆனதொருபாக்கியங்கள் குறைவுகாணு மல்லலேவறுமையுள்ளானசட்டுக்காரன், கானகத்திலேதிரிவன் மைந்தனில்லைக் கடிதானமலடனென்றுக்காட்டலாமே.

## ரிஷபமிரண்டாம்பாதம்.

காட்டலாம்பிடபமது ரெண்டாமபாதம் கடியதொருபெண்பிறக்கும் மலந்துவிழும், மூட்டலாமொன்றுறுமிருபத்தெட்டில்முசிவாகும் முசியாட்டாலன்பத்தெட்டு, தேட்டலா மிவளாலே பாக்கியங்கள் செல்வமதுபெருகிவருந்திட வாளாகும், சூட்டலாங்கற்புநெறி யுள்ளாளாகுந் தோஷமொருநாளறியாள் பெருமைதானே.

## ரிஷபமூன்றும்பாதம்.

பொருமையதுயிடபமதில் மூன்றப்பாதம் புத்திரன்று ஞெருக்கணித்துப்பிறக்கும்பாறு, வருமைமெத்தவுண்டாகும் வயதையாரு வயதுசென்றால் பாக்கியங்கள் வளருஞ்செல்வம், தருமமது செய்துமிகு சிந்தைகூடுந் தரித்திரம் விளங்கிடுமே யறுபத்தஞ்சில் இருதிமிகவந்துவிடுங் குழந்தையுண்டாம் யெப்போதுமேபெருமை யென்னலாமே.

## ரிஷபம்நான்காம்பாதம்.

எண்ணலாம்யிடபமதில் நாலாம்பாதம் யேந்திழைதான் பிறக்குக்கவிழ்ந்துவீழும் மண்ணுளபுத்திவரும் செல்வமீறாம் வயதொன்றிற்பன்னிரண்டிற் பதினாறில்தத்து, கண்ணுள மைந்தருண்டுப் பெருமையுள்ளான் கன்னியவள்தானுமது யிடும்புக்காரி, விண்ணுணம் பேசவல்லாள் நன்றிசெய்வள் வீணுகயொருநொடியி லறியுந்தானே.

## மிதுனமுதற்பாதம்.

அழியாதுமிதுனமதின் முதற்பாதத்தி லாண்பிறக்குமொருக்கணித்துவழகனாகும், குழிவாகுமாறுதிங்க ளிரண்டுமாறிற் கொன்றுவிடுந்தப்பி விட்டாலிருபத்தெட்டில், தெளிவாகுந்தத்துவந்து தீர்ந்துபோகுஞ் செல்வமுண்டாமுப்பதின்மேல் தீர்க்கமாக, வெளியானயறுபதிலே தத்துண்டாகும் விதிமுடிவுதப்பாது வேண்டிப்பாரே.

## மிதுனமிரண்டாம்பாதம்

பாரப்பாமிதுனமதில் யிரண்டாம்பாதம் பகையில்லாப்பெண்பிறக்கும் மலந்துவிழும், காரப்பாதிங்களெட்டில் வயதுமொன்றில் கண்டமுண்டுகலந்துவிட்டாற் பதினாறிற்றான், தீரப்பா யிருபத்தி யாறிற்றானுஞ் செல்வருண்டுபாக்கியங்கள் சேர்ந்துவாரும் நீரப்பா தத்துவரும் யெழுபத்தெட்டில் நிலையறியச்செய்துவைத்து நீங்கும்பாரே.

மிதுனம்மூன்ரும்பாதம்

நீங்காதமிதுனமதில் மூன்ரும்பாதம் நெறியாகதான்பிறக்குங்கவிழ்ந்துவிழும், ஆங்காரமுண்டாக மாண்டில்பத்தி லழிந்துவிடுமழியாவிட்டாற்பதினெட்டில்தான், தூங்கலாயிருந்திடுவென் னேயுண்டாகித் துடியாகயெழுநான்கில் தத்துண்டாகி, வாங்காது தழைத்துமிக்கமைந்தருண்டாம்பால்பெருகும் வரிசைபல சுகமுண்டாமே.

மிதுனம்நான்காம்பாதம்

ஆமப்பாமிதுனமதில் நாலாம்பாத மரிதியெனவந்துதிக்கு மலந்துவீழும், போமப்பா அஞ்செட்டாற் பன்னிரண்டில் தத்துப்பொல்லாதருணத்துடனே சகடுமாகும், நாமப்பாமுப்பத்திரண்டில்தத்து நயமாகயிதுகழித்தாலன்பத்தெட்டுத், தாமப்பா செல்வம்வந்து குறைந்துகாணுஞ் சந்ததியுங்குறைவாகுஞ் சடையுங்காணே.

கடகம்முதற்பாதம்

காணவேகடகமதில் முதற்பாதத்திற் கவிழ்ந்துவிழுந்தாண்பிறக்குங்கருணையாகப், பூணவே பொன்னுமிகப் பொருளுண்டாகிப் போகபாக்கியங்கள் மெத்தப் பெரிகிவாழும், நாணவே அஞ்செட்டி லிருபத்தெட்டில் நாற்பதிலுந்தத்துண்டு வருமையாகும், தோணவே யெழுபத்திரண்டில் தத்துத் துடியாகமாளுமென்று சொல்லினேமே.

கடகம் இரண்டாம்பாதம்.

சொல்லிவிட்டோம் கடகமதிலிரண்டாம்பாதந் தோகையவபிறந்திடுவெள்மலர்ந்துவீழும், மெல்லிநல்லாள் நகாளேந்தி லிருபத்தைந்து விறைந்துவிடும் விறையாவிட்டால் வயதொன்றில், சல்லியங்கள் தகப்பனுக்கு வழக்குண்டாகுந் தாய்தனக்குநோயுண்டாம் மாமன்சேதம், மெல்லிநல்லாள் நாற்பத்தி யெட்டிற்சேதம் விளைவுகெட்டுக் காலிநஷ்டம் மேவிப்பாரே.

கடகம் மூன்ரும்பாதம்

மேவியேகடகமதில் மூன்ரும்பாதம் வேந்தனவ னெருக்கணித்துப்பிறக்கும்பாரு தாவியேசெத்துவிருந்தாய்க்கு நோயாந் தான்பிழைத்தா லாரெட்டிற் றண்ணீர்தத்துக், கூவியேயிதுதப்பிப் பிழைப்பானுகில் குழந்தையில்லா மடலனென்றுக் கூரலாகும், வோவிய

மாய் முப்பத்தியெட்டில்தத்து வுறுதியெனவறுபதிலே யொழியுந் தானே.

கடகம்நான்காம்பாதம்

ஒழியாதுகடகமதில்நாலாம்பாதம் மோவியமாய் பெண்பிறக்குங்க விழ்ந்துவீழும், அழியாமலழிந்துப்போ மழியாவிட்டா லஞ்சிலேதண் ணீரிற்சற்பத்தாலே, விழிபோகும் நாற்பத்தியெட்டிற்கொல்லு ம்மென் மேலுபாக்கியங்கள் பெருகிவாழும், தெளிவானபுத்தியுண்டாக தருமஞ் செய்யுஞ்செய்தநன்றி மறவாமலிருக்கும் பாரே.

சிம்மம் முதற்பாதம்.

பாரப்பாசிங்கத்தின்முதற்பாதத்திற் பாலனவன்மலந்துதான் பிற க்கும்பாரு, ஆரப்பாபிறந்தவுடன் சேதங்காணும், மழியாட்டா பதினை ந்திலன்னைசேதம், சிரப்பாமுப்பத்தியாறில்கண்டஞ்சிறப்பான நாற்பத் தியெட்டிற்சேதம், காரப்பாசெல்வமது பெருக்கமுள்ளான் கலியாணம் போல்வாழ்வு கருதலாமே.

சிங்கமிரண்டாம்பாதம்

கருதலாஞ்சிங்கமதி விரண்டாம்பாதங் கன்னியவளொருகணித்து ப்பிறக்கும்பாரு, கருதலாமொருவயதுமூன்றுயெட்டுக் கடந்து விடுமழி யாட்டாலன்பத்தேழு, கருதலாம்பாக்கியங்கள் பெருத்துக்காணுங் காலி யது பிழைத்திருக்குஞ்சிறுத்தும்போகும் கருதலாந் துஷ்டியவள் சிறு கண்ணிக் கைமுதலு மழிந்துபோஞ்சேதந்தேனே.

சிம்மம்மூன்றுமாதம்,

சேதமாஞ்சிங்கமதில் மூன்றும்பாதந் திடமாகவாண்பிறக்குங்கவி ழ்ந்துவீழும், சாதகமாயாறுபத்துப்பதினெட்டிற்சேதந் தவறினலெழு பதிலேதவறிப்போகும், ஓதவேதமிழுமுண்டாம் பாக்கியங்கள் வுலகத் தில்நல்லோனென்றுரைகள்பேசும், சீதமாயமுகுடனே செல்வம்பேன் மைத் திடமாகத்தனந்தேடி யழிப்பன்றானே.

சிங்கம்நான்காம்பாதம்.

அழியாதுசிங்கமதில் நான்காம்பாத மழகானபெண்பிறக்கு மலந் துவீழும் தெளிவானநாலுயெட்டுமுப்பத்தாறில் திடமாகநாற்பத்தியெ ட்டிலேதான், குழிவானபாக்கியங்கள் பெருக்கந்தோணுங்குழந்தையது பெருத்திருக்குஞ் சனக்கூட்டங்கள் ஒழியர்தநோயுண்டாமோதாநட்பா மொருமனதாயிருப்பா ளென்றுரைக்கலாமே.

### கன்னிமுதற்பாதம்.

உரைக்கலாங்கன்னியதில் முதற்பாதத்தி லுற்றதொருவாண்பிறக்குங் கவிழ்ந்துவீழும் சரைக்குமேநாலுபத்து மூவெட்டிலே தான் கண்டமதுயறுபத்து நான்கிலுண்டாம், குரைக்குமே வாழ்வற்பங் காளிகொஞ்சங் குடும்பங்களலைந்துபின்னுங் குடியுண்டாகும், மரைக்குமேமலடனென்றுப் பேசவேண்டும் வாழ்வுபின்னாற் செழித்துமிக வளருந்தானே.

### கன்னி யிரண்டாம்பாதம்.

வளருமேகன்னியது ரெண்டாம்பாதம் மங்கையதுயொருக்கணித்துப் பிறக்கும்பாரு, தளருமேசரீரமது மெலிந்துகாணுஞ் சந்ததியும்பெற்றிடுவாள் தழைக்குஞ்செல்வம், உள்ளதுதானென்று யெட்டுநாற்பத்தெட்டி லுகந்ததத்துவந்து விடுமுறுதியப்பா, விள்ளாதுயருபதிலே முடிவுந்தானே விருப்பமாய்தருமமது செய்வாள்சிரே.

### கன்னி மூன்றும்பாதம்.

சீருள்ளகன்னியது மூன்றும்பாதஞ் சிறப்பானவாண்மலந்து பிறக்கும்பாரு, தேருமேஞானமுள்ளான் கற்பமுண்டுச் சிவசிந்தைக்கணமும்விடான் செல்வமீரு, ஆறுமேகோபமும் மகந்தைபேசாதத்துண்டா மல்லாவிட்டால், பேறுமேயறுபதும் பெண்பத்தைந்திற் பிசாதுகண்டமுண்டாம் பேணிப்பாரு.

### கன்னி நான்காம்பாதம்.

பேணிப்பார்கன்னியதில் நான்காம்பாதம் பெண்பிறக்குமொருக்கணித்துப் பிழைத்தால்நன்று, நாணிபங்கமுள்ளவளே மூன்றுபத்து நாற்பத்தியெட்டிலே மரணங்காட்டும் வாணிபங்கள்பலித்திருக்குஞ் செல்வமீரு மைந்தரையும்பெற்றிடுவா ளறிவுகாணும், மாணிபங்கமுள்ளதுவா மச்சமுண்டு வணங்கியேதெய்வபத்தி வருகும்பாரே.

### துலாம் முதற்பாதம்.

வருகுமேதுலாமதிலே முதற்பாதத்தில் மன்னவனுங்கவிழ்ந்துதான் பிறக்கும்பாரு. கருகுமேதிங்களொன்றி லாறுயெட்டில் கண்டமுண்டாம் பதினெட்டிற் கடந்துதானால், தருகுமேபாக்கியங்களனேகவாழ்வு சந்ததியும்பெருகிவருந் தவமுண்டாகும், திருகுமெயறுபத்தி யாறில்கண்டஞ் செப்பினேன் சுந்தரனார் தெளிந்தநூலே,

துலாம் இரண்டாம்பாதம்

நூலான துலாமதிலேயிரண்டாம்பாதம் நுணக்கமாய்பெண்பிறக்கு மலந்துவிழும், மாலானனுலிலே கடுத்தகண்டம் மரைந்து விட்டால்நா ற்பத்தி யெட்டில்தத்து, சேலானசெல்வமது பெருக்கமாகிச் சிறுத்து விடுங்கொஞ்சனுள் வாழ்வுதானும், மூலமாய்க்காலியுண்டாம் பூமிலாபம் மூர்க்கமுள்ளபேச்சுடையாள் மொழிந்திட்டேனே.

துலாம் மூன்றும்பாதம்.

மொழிந்திட்டேன் துலாமதிலே மூன்றும்பாதமோகமா யொருக்க ணித்துப் பிறக்குமாணும், நெழிந்திட்டேன்யாபாரம் பெருத்துவாழ் வான் நீங்காதனுானவாள் தருமவாளன், அழிந்திடுமேயொன்றலா விருபத்தெட்டி லதுகடந்தாலெண்பத்தி யாறிலேதான், தெளிர்திட் டான்கற்பமுண்டு வேடம்பூண்டுச் சிவபதமுந்தவருமது நெறிகில் லாதே.

துலாம் நான்காம்பாதம்.

நெறியான் துலாமதிலே நான்காம்பாதம் நெறியுடனேபெண் பிற க்கு மலந்துவிழும், குறியானயொருவருடம் பிளைத்தால்நன்று குழ ந்தையுடன்வாழ்வுபெற்று மனேகமாகும், பிரியமாயைந்துபத்து யிரு பத்தாறில் பிழைத்தாலுமெழுபத்தி யெட்டிற்கொல்லும். வெறியான குணமுண்டுக் காலிசேரும் வினைவந்தாலண்டாது மேவிப்பாரே.

விருச்சிகம் முதற்பாதம்.

மேவியவிருச்சிகத்தின் முதற்பாதத்தில் விளங்கியேயாண்பிறக் குங் கழிழ்ந்துவிழும், கூவியேயெட்டிலும், முப்பத்தெட்டிற் குண க்கேடாய்த்தத்துண்டா மிளைப்புமாகும், தாவியேசெல்வமது குறை ந்துதேறுஞ் சந்ததியுங்குரைவாகுந் தவமுண்டானல், நாவிலேதமிழு முண்டாம் நன்மைகாட்டு நன்மனதுசெய்துவிடும் நாடிப்பாரே.

விருச்சிகம் யிரண்டாம்பாதம்.

நாடியேவிருட்சிகத்தி னிரண்டாம்பாதம் நல்லதொருபெண் பிற க்குமொருக்கணித்து, தேடியதோர்தனங்கிமிடு மசலைத்தேடுந் தெய்வ நெறிதப்பாது வணங்கிநிற்கும், ஆடியேயைந்துபனி ரெண்டில்தத்து மதுகடந்தாலிருபத்தி யெட்டிற்கொல்லும், கூடியேசிறப்பானக் காலி யுண்டாங் குணமானபாக்கியங்கள் பெருக்கவாழ்வே.

விருச்சிகம்மூன்றும்பாதம்.

வாழ்வானவிருச்சிகத்தில் மூன்றும்பாதம் மைந்தனவனெருக்க ணித்துப் பிறக்கும்பாரு, தாழ்வொருனுள்வாராது பாக்கியங்கள் சந்ததியும் பெறறிமுக்குஞ் சடைவோதம், கோளாகயிருந்திடுவன்குட க்கேடாகுங் குற்றமதுபொருக்கறியான் பிச்சையானன், பாழானவை ந்து பத்துநாற்பத்தெட்டுப் பருவயதுயருபதிலே மரணமாமே.

விருச்சிகம்நான்காம்பாதம்.

மரணமாம்விருச்சிகத்தில் நான்காம்பாதம் மங்கையதிகவிழ்ந்து தான் பிறக்கும்பாரு, மரணமேவராவிட்டா விருபத்தைந்தில் மங்கை யவள் கெற்பத்தோடிறந்து போவாள், மரணமேயில்லாவிட்டா விரு பத்தெட்டில் வாழ்வுமிகவுண்டாகு மைந்தருண்டாம், தருணமதிற்சம் பத்து காலிசேருஞ் சஞ்சலங்கள்வாராது சடைவுதானே.

தனுசு முதற்பாதம்.

சடைவில்லைதனுசதிலே முதற்பாதத்தில் சந்ததியுயலந்துதான் பிறக்கும்பாரு, குடையிலே மிகுத்தவனே குணமுமுள்ளான் குற்ற மதுபொருத்திடுவான் காலிசேரும், இடையிலேந்தெட்டுப்பதினறிலே தான் யிதுதவிர்ந்தா லெழுபதிலே மரணமாகும், தடையில்லாவாழ் வுண்டு பாக்கியங்கள் தான்பெருக்கித்தரைகீர்த்திக் தரிக்குந்தானே.

தனுசு யிரண்டாம்பாதம்.

தரிக்குமேதனுசுதனி லிரண்டாம்பாதந் தான்பிறக்கும் பெண் ணுமது கவிழ்ந்துவீழும், பெருக்கவேதமிழுண்டாம் நாலுபத்திற் பிசகாதுயிருபத்தி ரெண்டில்தத்து, சுருக்கமேபாக்கியங்கள் வளர்ந் துகாணுஞ் சொல்லுக்குவல்லவளே பெருமைக்காரி உருக்கமாயொ ன்றுபத்து யெண்பத்தாரி லொளிவாகுமகத்தீச ருறைத்தவாறே.

தனுசுமூன்றும்பாதம்.

உரைத்தபடி தனுசதிலே மூன்றும்பாதமொருக்கணித்துப் பிறக் குமாவுகந்துப்பாரு, நின்றத்தபடியைந் தெட்டில் முப்பத்தெட்டில் நீங்கிவிட்டாலறுபதிலே நிலைக்கும்பாரு துறைத்தனமுமரசுரிமைச் செய்யப்பண்ணுந் தோகையற்குப்பணந்தேடி யழிக்கவல்லன், அறைத் தபஞ்சதுபோலே மெலியச்செய்யு மகர்தையது மிகுந்திருக்கு மறிந் துப்பாரே.

தனுசு நான்காம்பாதம்.

அறிந்துபார்தனுசதிலே நான்காம்பாத மன்பான பெண்பிறக்கு மலந்துவீழும், பிரிந்துவிடுமிரண்டுபத்தில் முப்பத்தாரில் பிழைத்திருந்தாலறுபதிலே பிசகும்பாரு, தெரிந்ததொருவாழ்வேறும் புத்திரனுண்டாந் தேடாமல்தனங்கிட்டுங் காலிசேரும், எரிந்ததொருபொருள் மீறும் பாலுமுண்டாம் மில்லறமும்தழைத்துவரும் மினிதுகேளே.

மகரம் முதற்பாதம்,

கேளப்பாமகரமதின் முதற்பாதத்திற் கெடியாகவாண்பிறக்கு மலந்துவீழும், ஆளப்பாவைந்துபத்து மிருபத்தேறி லழிந்துவிடு மல்லாது மிருபத்தெட்டில், மீளப்பாசெல்வமது மிகுதியுண்டாம் மென்மேலும்பால்பெருகிச் சனங்கள்சேரும், சூழப்பாவன்னேசுத்தம் எளர்ந்துகாணும் துடியுள்ளான் ஞானமுள்ளான் சொல்லக்கேளே.

மகரம்இரண்டாம்பாதம்.

சொல்லவே மகரமதிலிரண்டாம்பாதஞ் சொல்லறியபெண்பிறக்குங் கவிழ்ந்துவீழும், அல்லவே பத்துயெட்டி விருபத்தொன்றி லழிந்துவிடு மதுதவறிலன்பத்தெட்டில், மெல்லவே பாக்கியங்கள் பெருத்துவாழ்வாள் வீணாகப்பெற்றிழப்பாள் சனங்கள்சேதம், நல்ல குணமில்லாமற் பிச்சையீவாள் நயந்தசொல்லுக் குடையாளென நாகந்தானே.

மகரம்மூன்றும்பாதம்.

தானேகேள்மகரமதில் மூன்றும்பாதந் தனிமையாயாண்பிறந் தொருக் கணித்துவீழும், மானமாயொன்றிரண் டிருபத்தாரில் மரணமதுதப்பிவிட்டால் நாற்பத்தெட்டில், ஊனமில்லாப்பாக்கியங்கள் குறைந்துகாணு முத்தமரைநற்குணமாயுகந்துவாழும், கானகமேதிரிந்த லைவன் கபடனாகுங் கால்முடவன் கைமுடவன் குருடன்தானே.

மகரம் நான்காம்பாதம்.

குருடானமகரமதில் நான்காம்பாதங் குமரியதுயொருக்கணித்துப் பிறப்பாள்பாரு, மருடானபதினைந்து முப்பத்தெட்டில் மரணமதுகடந்தா ளிருபத்தாரு, நெருடானபாக்கியங்கள் வளருந்தாச்சயமாய்க் காலியுண்டாயழிந்துபோகும், திருடானபுத்தியுட கோளுமுண்டு தேசத்தில்வல்வாயள் திட்டந்தானே,

கும்பம்முதற்பாதம்.

திட்டமாய்க்கும்பத்தின் முதற்பாதத்திற் செயமானவாண் பிறக்குங்கவிழ்ந்துவீழும், நட்டயமாயஞ்சுபத்து மிருபத்தெட்டில் நாடியே கொன்றுவிடுந்தப்புமாகில், மட்டாகவறுபதிலே கண்டமாகு வாழ்வுடன்குழ்வோடு மைந்தருண்டாம், அட்டதிசைவெல்லுமது குணவானாகும் மனுதினமுதெய்வபக்தி யணுகுந்தானே.

கும்பம்பிரண்டாம்பாதம்,

அணுகாது கும்பமதிரண்டாம்பாத மழகானபெண்பிறக்கும் மலந்துவீழும். அணுகிடுமேநாலுவயதிருபத்தைந்தி லதுதவிர்ந்தால் நாற்பத்திலெட்டில்கொல்லும், அணுகாது பேய்ப்பில்லி பசாசு நீங்கு மனேகமாய்ச்செல்வமுண்டு பெருதுங்காலி, அணுகாது யறுபத்தியாறிலேயு மதிந்திவிடுஞ்செல்வமது வளருந்தானே.

கும்பம்மூன்றம்பாதம்.

காணுமேகும்பமது மூன்றும்பாதந் தான்பிறக்கு மாண்பிள்ளையொருக்கணித்து, ஊனமதாயொற்றைக்கண்குருடனாகு மொதுங்கா விடிலேந்தெட்டிலேம்பத்தெட்டில், தோணுமேயறுபதிலே மரணஞ்சாட்டுஞ் சுகமானபாக்கியங்கள் வளர்ந்துதோணும் காணுமபாலுண்பான்கள்ளு முதலருந்திவாழும் பலதுனையுங்கண்டவனை பகைவனுமே.

கும்பநான்காம்பாதம்.

பகையானகும்பமதில் நான்காம்பாதம் பரிவானபெண்பிறக்குங் கவிழ்ந்துவீழும், சிகையானதொன்றைந்துமுப்பதாகுந்தேரிவிட்டால்யெழுபத்திரண்டிலேதான் துணையான பாக்கியங்களுள்ளளாகுந் துன்பமொடுயின்பமுண்டு தொகுத்துக்கேளு, வகையான திரவியங்கள் பெருகுஞ்சேதம் மைந்தருண்டாம் பின்னிட்டு மகிழ்வுண்டாமே.

மீனம்முதற்பாதம்,

உண்டானமீனமதின் முதற்பாதத்தி லொருக்கணித்து வான்பிறக்குஞ் செல்வமுண்டாம், கண்டாயேமூன்றுபத்து முப்பத்தாறில் கண்டமுண்டு கடந்துவிட்டால்யெழுபத்தாறில் பண்டான திரவியங்கள் சேர்ந்துவாழும் பலதுயரமுண்டாகும் பகையுமுண்டு சென்றவிடம் நன்மைதுன்மை யிரண்டுங்காட்டுஞ் செல்வர்களும் பெருத்துவருஞ்சிறுத்துப்போமே

மீனம்பிரண்டாம்பாதம்.

சிறுத்துவிடுமீனமதிலிரண்டாம்பாதஞ் செல்வியவள் மலந்துதான் பிறக்கும்பாரு, மறுத்துமொரு கற்புடையமங்கையாகும் வாழ்வுமெத்த

வுண்டாகுமைந்தருண்டாம் ஒருத்துமன்னம் பொசித்திடுவெளொன்று மெட்டி லொழிந்துவிடுந்தவரினலன்பத்தெட்டில் அறுத்துவிடும்பானு முண்டாமன்னமுள்ளா ளாண்பெண்ணும் பெற்றுமிகவழகுள்ளானே.

மீனம்மூன்றும்பாதம்.

அழகாளமீனமதில்மூன்றும்பாத மாண்பிறக்குமலந்து விடுமனே கஞ்செல்வம், வளமானவைந்துபத்து நாற்பத்தேழில் மாண்டுவிது மதுகடந்தாலறுபத்தெட்டில் பழமையாஞ்செல்வமுண்டு காலிசேரும் பாலுமுண்டு தவஞ்செய்ய மனதுண்டாகும் இளகானமனதுண்டாம் பேய்க்குமஞ்சான் யின்பதுன்பமிரண்டுமுண்டு மினிதுகேளே.

மீனம்நான்காம்பாதம்

இனிதானமீனமதில் நாலாம்பாதம் யேந்திழைதான் கவிழ்ந்து மே பிறக்கும்பாரு. கனிவானயொன்றுபத்து நாற்பத்தாறில் கண்டமு ண்டுக்கடந்துவிட்டால் யெழுபத்தாறில், அனியாயஞ்செய்யமனதுண் டாகும்பா ரகந்தையதுமெத்த வுண்டமும்புபேசும், சனியனுயெப்போ தும் நோயுண்டாகுஞ் சங்கையாம் லக்கினத்திற் பேசுந்தானே.

முற்றிற்று,

# புலிப்பாணிமுனிவர் ஆரூடம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | 1 | க | 20 | ங | 3 | ச | 60 | ஞ | 6 |
| ஆ | 1 | கா | 21 | ஙா | 4 | சா | 60 | ஞா | 8 |
| இ | 1 | கி | 20 | ஙி | 3 | சி | 6 | ஞி | 7 |
| ஈ | 1 | கீ | 30 | ஙீ | 13 | சீ | 70 | ஞீ | 17 |
| உ | 1 | கு | 20 | ஙு | 3 | சு | 60 | ஞு | 7 |
| ஊ | 1 | கூ | 26 | ஙூ | 9 | சூ | 66 | ஞூ | 17 |
| எ | 10 | கெ | 20 | ஙெ | 13 | செ | 60 | ஞெ | 17 |
| ஏ | 10 | கே | 30 | ஙே | 3 | சே | 60 | ஞே | 17 |
| ஐ | 20 | கை | 30 | ஙை | 3 | சை | 70 | ஞை | 17 |
| ஒ | 12 | கொ | 26 | ஙொ | 3 | சொ | 40 | ஞொ | 13 |
| ஓ | 12 | கோ | 26 | ஙோ | 9 | சோ | 66 | ஞோ | 13 |
| ஔ | 9 | கௌ | 26 | ஙௌ | 9 | சௌ | 66 | ஞௌ | 7 |
| கூ | 1 | | | ங் | 3 | ச் | 60 | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ட | 5 | ண | 50 | த | 400 | ந | 50 | ப | 80 |
| டா | 4 | ணா | 51 | தா | 401 | நா | 51 | பா | 81 |
| டி | 4 | ணி | 50 | தி | 400 | நி | 50 | பி | 80 |
| டீ | 13 | ணீ | 60 | தீ | 410 | நீ | 60 | பீ | 90 |
| டு | 4 | ணு | 50 | து | 400 | நு | 40 | பு | 70 |
| டூ | 10 | ணூ | 56 | தூ | 406 | நூ | 56 | பூ | 86 |
| டெ | 4 | ணெ | 50 | தெ | 407 | நெ | 50 | பெ | 80 |
| டே | 14 | ணே | 50 | தே | 400 | நே | 60 | பே | 90 |
| டை | 14 | ணை | 60 | தை | 406 | நை | 50 | பை | 90 |
| டொ | 4 | ணொ | 50 | தொ | 410 | நொ | 50 | பொ | 80 |
| டோ | 10 | ணோ | 56 | தோ | 410 | நோ | 56 | போ | 86 |
| டௌ | 10 | ணௌ | 56 | தௌ | 406 | நௌ | 56 | பௌ | 86 |
| ட் | 4 | ண் | 50 | த் | 400 | ந் | 50 | ப் | 80 |
| ம | 40 | மீ | 50 | மெ | 40 | மொ | 40 | ம் | 40 |
| மா | 41 | மு | 40 | மே | 50 | மோ | 46 | | |
| மி | 40 | மூ | 46 | மை | 50 | மௌ | 46 | | |
| ய | 10 | ர | 200 | ல | 30 | வ | 6 | ழ | 800 |
| யா | 11 | ரா | 201 | லா | 31 | வா | 7 | ழா | 801 |
| யி | 10 | ரி | 200 | லி | 30 | வி | 6 | ழி | 800 |
| யீ | 20 | ரீ | 210 | லீ | 40 | வீ | 16 | ழீ | 810 |
| யு | 10 | ரு | 206 | லு | 40 | வு | 6 | ழு | 800 |
| யூ | 16 | ரூ | 206 | லூ | 30 | வூ | 12 | ழூ | 810 |
| யெ | 10 | ரெ | 200 | லெ | 30 | வெ | 6 | ழெ | 800 |
| யே | 20 | ரே | 210 | லே | 40 | வே | 16 | ழே | 800 |
| யை | 20 | ரை | 210 | லை | 40 | வை | 16 | ழை | 810 |
| யொ | 10 | ரொ | 206 | லொ | 30 | வொ | 6 | ழொ | 800 |
| யோ | 16 | ரோ | 200 | லோ | 36 | வோ | 12 | ழோ | 906 |
| யௌ | 10 | ரௌ | 206 | லௌ | 36 | வௌ | 12 | ழௌ | 806 |
| ய் | 10 | ர் | 206 | ல் | 30 | வ் | 6 | ழ் | 900 |
| ள | 909 | ளெ | 900 | ள | 900 | று | 201 | றோ | 206 |
| ளா | 901 | ளே | 910 | | | றா | 200 | றௌ | 210 |
| ளி | 900 | ளை | 910 | ற | 200 | றெ | 210 | ற் | 200 |
| ளீ | 910 | ளொ | 900 | றூ | 201 | றே | 210 | | |
| ளு | 900 | ளோ | 906 | றி | 200 | றை | 206 | | |
| ளூ | 906 | ளௌ | 906 | றீ | 200 | றொ | 206 | | |
| ன | 50 | னீ | 50 | னெ | 50 | னொ | 50 | | |
| னா | 50 | னு | 50 | னே | 50 | னோ | 50 | ன் | 55 |
| னி | 50 | னூ | 50 | னை | 50 | னௌ | 50 | | |

| வாரம் | வாரஇலக்கம். |
|---|---|
| ஞாயிறு | 269 |
| திங்கள் | 457 |
| செவ்வாய் | 83 |
| புதன் | 120 |
| வியாழம் | 857 |
| வெள்ளி | 1806 |
| சனி | 110 |

# ஆரூடக்கேள்விகள்.

1-வது இந்தகெற்பம் ஆணு பெண்ணு பிழைக்குமா பிழையாதா
2-வது வயற்றிலேயிருக்கிற கெற்பம் அழிகிறதுஎதினாலே
3 வது நசவில்கிடக்கிறவன் பிழைப்பானு பிழையானு
4 வது ஊருக்குப்போனவன் நன்ருயிருக்கிருனுயில்லையா
5 வது சரக்குகொள்ளலாபமுண்டா யில்லையா
6 வது ஓடிப்போனவன் எந்தயிடத்தில் யிருக்கிருன்
7-வது போனவுடமை வருமா வராதா
8-வது இவனுக்குப்பிள்ளையுண்டா இல்லையா
9-வது இந்தப்பெண் உகந்துபிருப்பாளா இல்லையா,
10-வது இந்தப்பெண்ணைக்கொள்ள நன்றுதீதா
11-வது என்வழக்கு வெல்லுமா வெல்லாதா
12 வது களவுயெடுத்தது ஆணு பெணணு
13-வது வியாதியாய்க்கிடக்கிறவன் என்னகிழமையிறபடுத்தான்
14-வது ஊறுகருப்போனவன் சல்திவருவானு நாட்செல்லுமா
15-வது இந்தவியாதி தீருமா தீராதா
16 வது இந்தயிடத்தில் வீடுகட்டலாமா கூடாதா
17-வது இந்தவியாதி இந்தமருந்தினுல் தீருமா தீராதா
18 வது ஊறுக்குப்போகலாபமுண்டா இல்லையா
19 வது இந்தமாதம் மழையுண்டா இல்லையா
20 வது ஏறுவைக்கலாபமுண்டா இல்லையா
21-வது கிணறுவெட்டநீர்நிற்குமா நில்லாதா

22 வது எண்ணியகாரியம் ஆகுமா ஆகாது.
23 வது இந்தவியாதி எதினாலே வந்தது.
24-வது இந்த வியாதி யாராலே வந்தது.

—:0:—

## இதர்குவிப்ரம்.

மேற்கூறிய 24 கேழ்விகளில் அவரவர் கருத்திலுள்ளபடி நினைத்துக் கொண்டு யெந்த கேழ்வியை யாதாமொருவர் வந்து கேட்பார்களாகில் அவர்கள் கேட்டகேழ்வியை சிலேட்டில் எழுதிவைத்துக்கொண்டு மேற்படி கேள்விகேட்டவர்களின் பெயரைக்கேட்டு அந்த பெயருக்கு முதல் யெழுத்து யெதுவோ அந்த எழுத்தை (28) வது பக்கத்திலுள்ள எழுத்துவரிசைகளில் பார்வையிட்டு மேற்படியார் தலைப்பெழுத்துக்குண்டான லக்கமும் வாரஇலக்கப் பிரகாரம் எந்தவாரத்தில் கேட்கின்றாரோ அந்தவாரத்தினுடைய (இலக்கமும்) சேர்த்து மொத்தமாக்கி அடியில்வரும் விபரப்படிக்கு கழிப்பன கழித்துநிலுவையாகும் சேடப்பிரகாரம் பலன்சொல்ல வேண்டியதென்றறிக

1-வது இந்த கெற்பம் ஆணா பெண்ணா அல்லதுகிலைக்குமா அழியுமாவென்று ஒருவர் கேட்கில் அப்படிக் கேட்டவர்கள் பேரின் முதலெழுத்திற் குடைய இலக்கமும் அந்த வாரத்திற்குடைய இலக்கமும் கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு ஆண்என்றும் 2-க்கு பெண் என்றும் 3 க்கு அழிந்துபோமென்று சொல்லவும்.

2-வது உருதியுடையவயற்றிலே யிருக்கிற கெற்பம் அழிகிறது யெதினாலே என்று கேட்டால் அந்த பெண் பெயருக்குண்டான முதல் அட்சரத்தைக்கேட்டு அந்தஎழுத்திற்குரியலெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும்கூட்டி 4 வில் கழித்தமிச்சம் 1-க்கு ஊஷ்ணம் 2-க்கு கெற்பக்கரப்பான் 3 க்கு பசாசுகுணம் 4 க்கு குளிதோஷம் அல்லது சூனியமென்று சொல்லவும்.

3 வது நலியாய்க்கிடக்கிறவன் பிழைப்பானா பிழையானாயென்று கேட்டால் அந்தநோயாளி பேருக்குண்டான முதலெழுத்திற்குரிய லெக்கமும் அந்தவாரத்தின் இலக்கமும் ஒன்ருய்க்கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு பிழைக்கமாட்டான் 2-க்கு பிழைப்பான் 3 க்கு வியாதிதீர வெதுநாட் செல்லுமென்று சொல்லவும்.

4-வது ஊருக்குப்போனவன் நன்ருயிருக்கின்றானா யில்லையாவென்று கேட்டால் கேட்டவன் பேருக்குறிய முதலெழுத்தின் லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் ஒன்ருய்க்கூட்டி 2-ல் கழித்த

மிச்சம் 1-க்கு நன்ருய் யிருக்கின்ருன் 2-க்குசுகமில்லை நலியாயிருக்கிரானென்று சொல்லவும்.

5 வது சரக்குள் கொண்டுவந்து விற்ருல் லாபமுண்டா யில்லையா வென்று கேட்டால் அந்தசரக்கின் பெயருக்கு முதலெழுத்திற்குண்டான லெக்கமும் பிரஸ்னை கேட்கவந்த வாரத்திற்குரிய லெக்கமும் ஒன்ருய்க்கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு நடுத்திரமாயிருக்கும் 2 க்கு ஆதாயமுண்டு 3 க்கு சிலவழிந்து சேதமாய்ப் போகுமென்று சொல்லவும்.

6-வது ஓடிப்போனவன் எந்தயிடத்தி லிருக்கின்ருனென்று கேட்டால் ஓடிப்போனவன் பெயரின் முதலெழுத்துக் குண்டான லெக்கமும் அந்தவாரத்திக்குரியலெக்சமும் ஒன்ருய்க்கூட்டி 4-ல் கழித்தமிச்சம் 1 க்கு கிழக்கேயிருக்கிருன் 2 க்கு வடக்கேயிருக்குருன் 3 க்கு மேற்கேயிருக்குருன் 4 க்கு தெற்கே யிருக்கிருனென்று சொல்லவும்.

7-வது போன உடமைவருமா வராதாவென்று கேட்டால் கேட்டவன் பெயரின் முதலெழுத்துக்குண்டான லெக்கமும் அந்தவாரத்திற்குரிய லெக்கமும் ஒன்ருய்க்கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு வரமாட்டாது 2-க்கு சிக்கிரம்வரும் 3 க்கு எப்போதும் கிடைக்காது.

8-வது இவளுக்குப் பிள்ளையுண்டா இல்லையாவென்றுகேட்டால் அந்தபெண்ணின் பெயரின் முதலெழுத்துக்குண்டானலெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் ஒன்ருய்க்கூட்டி2-ல் கழித்தமிச்சம் 1-க்கு பிள்ளையில்லை 2-க்கு பிள்ளையுண்டென்று சொல்லவும்,

9-வது இந்தபெண் குணவதியா இருப்பாளாயிராளாவென்றுகேட்டால் அவள்பெயரின் முதலெழுத்திற்குண்டான லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் ஒன்ருய்க்கூட்டி 4 ல் கழித்தமிச்சம் 1-க்கு பகையுண்டு 2 க்கு புத்திசாலியா யிருப்பாள் 3 க்கு ஒருவனைப்பற்றியோடிப்போவாள் 4 க்கு நல்லவளாயிருந்து வாழ்வாளென்று சொல்லவும்,

10 வது இந்த பெண்ணைக்கொள்ள நன்ரு தீதாவென்று கேட்டால் அந்தமாப்பிள்ளையுடைய பெயரின் முதலெழுத்துக்குரிய லெக்கமும் ஒன்ருய்க்கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு ஆகாது 2-க்கு நன்ருய் வாழ்வாள் 3 க்கு அன்பாயிருப்பாள்,

11-வது ஒருவர்வந்து என்வழக்கு வெல்லுமா வெல்லாதாவென்றுகேட்டால் அந்த வழக்காளியினுடைய பெரியன் முதலெ

ழுத்துக்குரியலெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 4ல் கழித்தமிச்சம் 1 - க்கு ஜெயமாகும் 2 - க்கு சிலநாட்சென்றுவெல்லும் 3-க்கு அப்போதே எடுப்பட்டுப்போகும் 4-க்கு தன்விரயப்பட்டு சமர சமாமென்று சொல்லவும்

12 வதுகளவு செய்தது ஆணு பெண்ணு வென்றுகேட்டால்அந்த வஸ்துவின் பெயருக்கு முதலெழுத்திற்குண்டான லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு ஆண் 2 க்கு பெண் 3-க்கு பூமியிலிருக்கிற தென்று சொல்லவும்.

13 வது வியாதியா யிருக்கிறவன் என்னகிழமையில் வியாதியாய்ப்படுத்தானென்று கேட்டால் வியாதியஸ்தன்பெயரின் முதலெழுத்திற் குண்டானலெக்கமும் பிரசனை கேட்ட வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 7-ல் கழித்தமிச்சம் 1 க்கு ஞாயர் 2 க்கு திங்கள் 3-க்கு செவ்வாய் 4 க்கு புதன் 5-க்கு வியாழம் 6 க்கு வெள்ளி 7-க்கு சனியென்று சொல்லவும்,

14 வது ஊர்பயணம் போனவர் சீக்கிரம் வருவாரா வரமாட்டா வென்று கேட்டால் கேட்டவன்பெயரின் முதலெழுத்துக்குண்டான லெக்கமும் பிரசனைகேட்ட வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 3 ல் கழித்த மிச்சம் 1 க்கு ஜல்தியில்வருவார் 2-க்கு நாட்சென்று வருவார் 3 க்கு வழியில் வருகிருரென்று சொல்லவும்,

15 வதுஇந்தவியாதிதீருமா தீராதாவென்றுகேட்டால் அந்தவியாதியஸ்தனுடையபேரின்முதலெழுதுக்குரியலெக்கமும் பிரசனைகேட்ட வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி3 ல் கழித்தமிச்சம் 1-க்கு அவிழ்தம் உண்ணத்தீரும் 2 - க்கு தெய்வப்பிரார்த்தனை செய்யத்தீரும் 3 - க்கு அசாத்தியமென்று செல்லவும்,

16 வது இந்த யிடத்தில் வீடுகட்டினுல் நன்மையுண்டா தின்மையுண்டா வென்று கேட்டால் கேட்டவன் பெரியன் முதலெழுத்துக்குரிய லெக்கமும் பிரசினைகேட்ட வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 7-ல் கழித்தமிச்சம் 1-க்கு பசுலாபமுண்டு 2-க்கு அக்கினிபடும் 3 க்கு கிழக்குபார்த்த வீடாய்கட்டினுல் சுகம் 4-க்கு பண்டு பலாதிகளுக்கு அழிவுவரும் 5-க்கு தெற்குபார்த்தவீடாய் கட்டவேண்டும் 6-க்கு பேய் பசாசு குடியாகும் 7-க்கு வடக்குபார்த்தவீடாய் கட்டினுல் சிரஞ்சிவியா யிருப்பார் என்பதாம்,

17 வது இந்தமருந்தினுல் வியாதிதீருமா தீராதாவென்று கேட்டால் வியாதியஸ்தன் பெயருக்குரிய முதலெழுத்து இலக்கமும் பிரசினைகேட்ட வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 3 ல் கழித்தமிச்சம் 1-க்கு சீக்கிரம் தீரும் 2 க்கு வியாதி அதிகப்படும் 3-க்கு நெடுநாட் சென்று தீரும் என்பதாம்,

18-வது ஒருவன் வந்து ஊருக்குப்போகாலாபமுண்டா யில்லையா வென்றுகேட்டால் கேட்டவன் பெயரின் முதலெழுத்துக்குரிய லெக்கமும் பிரஸ்னை கேட்டவாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 4 ல் கழித்தமிச்சம் 1-க்கு சுகமுண்டு 1-க்கு வழியில்பயம் 3-க்கு லாபமுண்டு 4-க்கு போரகாரியம் ஆகாது என்பதாம்,

19—வது மழையுண்டா யில்லையா வென்றுகேட்டவன் பெயரின் முதலெழுத்திற்குரிய லெக்கம் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1 க்கு சவுதியில் மழையுண்டு 2-க்குமழை யில்லை 3-க்கு கிராமதேவதைக்கு பிரார்த்தனை செய்யவேணுமென்று சொல்லவும்,

20 வது ஏருவைக்க லாபமுண்டா யில்லையா வென்றுகேட்டால் கேட்டவன் பெயரின் முதலெழுத்துக்குரிய லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு நல்லவிளைவுண்டு 2-க்கு சாவியாகும் 3 க்கு விழுகிறமாடு நஷ்டம்

21-வது ஒருவன் வந்து இந்தயிடத்தில் கிணறுவெட்டினல் ஜெலம் ஊருமா ஊராதா வென்றுகேட்டால் அவன் பெயரின் முதலெழுத்திற்குரிய லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் ஒன்றாய்க் கூட்டி 4-ல் கழித்தமிச்சம் 1-க்கு ஜெலம் சாகரமாய் ஊரும் 2-க்கு பாறையாயிருக்கும் 3-க்கு எதுவாய்த்தண்ணீர் ஊரும் 4-க்கு ஆகாது ஜெலமட்டாமென்று சொல்லவும்

22-வது எண்ணியகாரியம் ஆகுமா ஆகாதாவென்று கேட்டால் அவர் பெயரின் முதலெழுத்துக்குரிய லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் கூட்டி 3-ல் கழித்தமிச்சம் 1-க்கு நினைத்தகாரியம் கைகூடும் 2-க்கு மத்திபம் 3-க்கு நாட்சென்றுகூடும்.

23 வது இந்த வியாதியெதினல் வந்ததென்றுக் கேட்டால் அந்த நோயாளிபெயரின் முதலெழுத்துக்குரிய லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் ஒன்றாய்க்கூட்டி 4 ல் கழித்தமிச்சம் 2-க்கு உடம்பில் பிரந்தவியாதி 2-க்கு கர்மவியாதி 3-க்கு ஏவல்போக்கு 4 க்கு சூனிய வைப்புகுணமென்று சொல்லவும்,

24 வது இந்த வியாதியாரால் வந்ததென்றுகேட்டால் அந்த நோயாளி பெயரின் முதலெழுத்துக்குரிய லெக்கமும் அந்த வாரத்திற்குரிய லெக்கமும் ஒன்றாய்க்கூட்டி 3 ல் கழித்தமிச்சம் 1-க்கு ஆணால் வந்தது 2-க்கு தூரத்தாரால் பெண்ணால் வந்ததென்றும் 3-க்கு தெய்வகுற்றத்தாலே வந்ததென்று சொல்லவும்

நஷ்ட ஜாதக கெணிதம் முற்றிற்று.